பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 16 வெள்ளிக்கிழமை 30.12.2022 கதிர் 55

### இது ரகசியம் அல்ல!

தன்னுடைய பொறுப்பற்ற - அசிரத்தையான - போக்கினால், தன்னையும், தான் தலைமை வகிக்கும்யாழ். மாநகரசபையின் செயல்பாடுகளையும் சிக்கலில் கொண்டு போய் மாட்டி வைத்திருக்கின்றார் மேயர் மணிவண்ணன் என்றே ☞2

# பிற கட்சிகளை கூட்டுச் சேர்க்க தமிழரசு மறுப்பு

## அரசியல் குழுவின் முடிவு அது என்று சுமந்திரன் திட்டவட்டமாக அறிவிப்பு



கொழும்பு, டிசம்பர்30

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழ் அரசு கட்சி, தனது பாரம்பரியக் கூட்டாளிகளுக்கு மேலதிகமாக மற்றத் தமிழ்க் கட்சிகளைச் சேர்த்துப் பரந்த அரசியல் கூட்டணியை உருவாக்குவதற்கான கோரிக்கையை நிராகரித்திருப்பதாக தமிழரசுக் கட்சியின் சார்பில் சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார். ☞2

## முப்பதாயிரம் அரச ஊழியர்கள் நாளை ஒரே நாளில் ஓய்வுக்கு!



நாடளாவிய ரீதியில் அரசாங்க ஊழியர்கள் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் நாளை 31ஆம் திகதியுடன் ஓய்வு பெற்று செலகின்றனர்.

இவர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசாங்கம் உரிய வேலைத் திட்டத்தை முன்னெடுத்துள்ளது என பொது நிர்வாக,மாகாண சபைகள், உள்ளூராட்சி சபை இராஜாங்க அமைச்சர் ☞2

## 24 லட்சத்திற்கும் அதிகமானோர் நாட்டில் வறுமையின் பிடிக்குள்

### செஞ்சிலுவைப் புள்ளிவிவரம் தெரிவிப்பு

தற்போதைய நெருக்கடி காரணமாக 2021 ஆம் ஆண்டில் நாட்டின் மக்கள் தொகையில் 24 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் வறுமையில் விழுந்துள்ளனர் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

அவர்கள் வெளியிட்டுள்ள சமீபத்திய ஆய்வறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நெருக்கடிக்கு மத்தியில், கடந்த 2021 ஆம் ஆண்டில் நாட்டின் மக்கள்தொகையில் சுமார் 11 வீதத்தினர் - அதாவது 24 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் - வறுமை நிலையை ☞2

## பேரா பல்கலை மாணவர் பிரதிநிதி கடத்தப்படவில்லையாம்; கைதாம்!

பேராதனை பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவர் அனுருத்த விதானகே குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேராசிரியர் அதுல சேனாரத்ன தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி நீதிமன்றத்திற்கு அருகில் பேராதனை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் அனுராத விதானகேவை வானில் வந்த சிலர் கடத்திச் சென்றனர் எனப் பேராதனை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் ☞12

## சீன நன்கொடை அரிசி பற்றி வதந்தி பரப்பப்படுகின்றதாம்!

### பிரதித் தூதர் கவலை தெரிவிப்பு



(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம்,டிச.30

சீன நாட்டினால் வழங்கப்பட்ட அரிசி தொடர்பில் ஒரு சிலரால் வதந்தி மற்றும் பொய்யான தகவல்கள் பரப்பப்படுகின்றன என இலங்கைக்கான சீன பிரதித் தூதுவர் ஹு வெய் தெரிவித்தார். ☞12



## கடலட்டை பதனிடும் தொழிற்சாலை யாழ். நாவாந்துறையில் திறந்துவைப்பு

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம்,டிச.30

யாழ்ப்பாணம் நாவாந்துறை பகுதியில் கடலட்டை பதனிடும் தொழிற்சாலை நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது.

நேற்றுக் காலை 9 மணியளவில் சுகந் ☞12

## ஆலையடிவேம்பில் சிறுவன் நீர்க்குழியில் விழுந்து சாவு!



மலசல கூடத்திற்காக வெட்டப்பட்டு, நீர் நிரம்பியிருந்த குழியில் வீழ்ந்த 7 வயது நிரம்பிய சிறுவன் பலியான சோக சம்பவம் நேற்று ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கண்ணகி கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.ரவிக்குமார் லிதிஸ் எனும் சிறுவனே இவ்வாறு மரணமடைந்துள்ளான்.

தண்ணீர் தட்டுப்பாட்டினை எதிர்கொள்ளும் இந்தப் பகுதியில்மேற்படிகுழியில்நிரம்பியநீரை அவ்வப்போது சில தேவைகளுக்காக ☞12

## திருடர்களை வைத்தே ஆட்சியை ரணிலும் தொடர முயலுகிறாராம்!

### பேராசிரியர் நாலக கொடஹேவா எம்.பி. சாட்டை



அரசாங்கமும் அதிபர் ரணில் விக்கிரமசிங்கவும் திருடர்களை வைத்து ஆட்சி செய்ய முயற்சிக்கிறார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் நாலக கொடஹேவா குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கையில் தற்போது நடைபெறும் லஞ்ச, ஊழல் நடவடிக்கைகளுக்கு தீர்வு காணாது நாட்டின் பொருளாதார ☞12

## சஜித் கட்சியின் பேச்சாளராக உமாச்சந்திரா பிரகாஷ் நியமனம்



ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளராக (தமிழ்) உமாச்சந்திரா பிரகாஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸவால் அவர் நேற்றைய தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு - எதுல்கோட்டையில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் ☞12

## தேர்தலை நடத்துவதாகக் கூறிக்கொண்டே அதைப் பிற்போட திரைமறைவில் அரசு சதி!

### வெட்கம் என்கின்றார் வாசுதேவ நாணயக்கார



கொழும்பு,டிச.30

உள்ளூராட்சி மன்றத் தேர்தலைப் பிற்போட்டால் ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைத்து அரசாங்கத்திற்கு எதிராக மாபெரும் போராட்டத்தில் ஈடுப டுவோம்.

மக்களாணைக்கு அச்சமடைந்து தேர்தலை பிற்போட முயற்சிப்பதையிட்டு அரசாங்கம் வெட்கமடைய வேண்டும் என இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். ☞12

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோன்றுகின்றது. யாழ் மாநகர சபையில் அவருக்கு இனி மீட்சி பெரும் கஷ்டம் என்றே படுகின்றது.

மாகாண சபை இல்லை. மாகாண நிர்வாகம் முழுமையாக ஆளுநரிடம். யாழ் மாநகர சபை உட்பட உள்ளூராட்சி சபைகளைக் கையாளும் பொறுப்பு மாகாண உள்ளூராட்சி அமைச்சர் இல்லாத சூழலில் நேரடியாக ஆளுநர் வசம் தான்.

தன்னுடைய அலட்சியமான - பொறுப்பற்ற - போக்கினால் யாழ். மாநகர சபையின் குடுமியைப் பிடித்துக் கொண்டு போய் ஆளுநரிடம் ஒப்படைத்து, திசையறியாது, திரிசங்கு நிலையில் நிற்கிறார் மேயர் மணிவண்ணன்.

நாளை டிசம்பர் 31வரை யாழ். மாநகர சபையின் நாளாந்த விவகாரங்கள் என்ற வண்டி ஓடும். மணிவண்ணனின் உத்தியோகப்பூர்வ வாகனமும் கூட. யாழ் மாநகர சபையின் கணக்கில் தான் பயன்படுத்தும்வாகனத்துக்கு அவர் எரிபொருள் நிரப்புவதாயினும் அது நாளையுடன் கட்டுப்படுத்தப்பட்டு விடும். இன்றே நேரத்துடனே எரிபொருள் தாங்கியை நிரப்பி விடுவாரோ என்னவோ...!

விடயம் இதுதான்:-

சபையின் வரவு - செலவுத் திட்டம் டிசம்பர் 31க்கு முன்னர் அங்கீகரிக்கப்பட வேண்டும். இல்லையேல் ஜனவரி 1 முதல் சபையின் கொடுக்கல் - வாங்கல் முடங்கிவிடும்.

ஆளுநரிடம் விசேட அனுமதி பெற்றுத்தான் சபை நாளை மறுதினம் முதல் ஒவ்வொரு சதத்தையும் செலவிட முடியும் என்கின்றன நிதி விவகாரம் தெரிந்த அரச அதிகார வட்டாரங்கள்.

வரவு - செலவுத் திட்டத்தை அங்கீகரிப்பதற்கும், தப்பித்தவறி முதல் முறை அது சபையால் நிராகரிக்கப்பட்டால், மீண்டும் இரண்டுவாரத்துக்குள் அடுத்த கூட்டத்தை கூட்டுவதற்கு இடம் அளிக்கும் விதத்திலும், வழமையாக அதன் முதல் கூட்டத்தை டிசம்பர் முதல் இரு வாரங்களிலேயே உள்ளூராட்சி சபைகள் நடத்தி விடுகின்றன.

ஆனால் நம் மேயர் டிசம்பர் முதல் வாரத்தில் தமது உறுப்பினர்களையும் கூட்டிக்கொண்டு கொழும்புக்கு ஜாலி சுற்றுலா போய் கொண்டாட்டம் நடத்தினாரே தவிர, வரவு - செலவுத் திட்டத்திற்கு ஏற்பாடு செய்யவில்லை. சுற்றுலா முடிந்து வந்து, ஆறுதலாக டிசம்பர் 21 ஆம் திகதி அதனைக் கூட்டினார். இதுவரை காலமும் அவருக்கு முண்டு கொடுத்து வந்த ஈ.பி.டி.பி. ஆதரவை விலக்க அவரின் வரவு - செலவுத் திட்டம் கவிழ்ந்தது. போதாக்குறைக்கு வரவு - செலவுக் கணக்குகளிலும் பல தப்பும் தவறுகளும்.

விரைந்து இரண்டாவது முயற்சியைச் செய்திருக்கலாம். நாளைய தினத்துக்கு முன்னர் மீண்டும் வரவு - செலவுத் திட்டத்தின் மறுவாசிப்புக் கூட்டத்தை நடத்துவதற்கு நோட்டீஸ் அனுப்பி இருக்கலாம். அதை செய்யாமல் ஏனோதானோ என்று பொறுப்பின்றி மெத்தனமாக நடந்து கொண்டார் மேயர்.

டிசம்பர் மாதத்துக்கான சபையின் மாதாந்தக் கூட்டத்தையும் தம்பம்பாட்டில் ரத்துச் செய்தார்.

தமக்குமேயர்பதவி இல்லாவிட்டாலும் சபையே இருக்கக் கூடாது, அது கலைந்து விட வேண்டும் என்ற எண்ணம் போலும் மேயருக்கு.

மீண்டும் வரவு - செலவுத் திட்ட அனுமதிக்கான கூட்டத்தை நாளை டிசம்பர் 31க்கு முன் நடத்துவதற்கு இனி இடமில்லை.

ஜனவரி 02 இற்குப் பின் நடத்துவதாயின் ஆளுநரின் - உள்ளூராட்சி ஆணையாளரின் - விசேட அனுமதி பெற வேண்டும். அதுவும் தோற்றால் மேயர் பதவி விலக, புதிய மேயர் தெரிவாக வேண்டும்.

எனினும், அத்தகைய சந்தர்ப்பத்தில் இரண்டாவது தடவை வரவு - செலவு திட்டத்தைச் சமர்ப்பித்து தோல்வியுற்ற மேயர் பதவி துறந்தவர் என்று கூறும் உள்ளூராட்சி சட்டங்கள், எனினும் அவர் சமர்ப்பித்த வரவு - செலவு திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்பட வேண்டும் என்றே விவரிக்கின்றன.

டிசம்பர் 21ஆம் திகதி முதலாவது வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டமையால் அடுத்த இரு வாரங்களுக்குள் - வரும் 4ஆம் திகதிக்கு முன்னர் - புதிய வரவு - செலவுத்திட்ட சமர்ப்பணத்துக்கான கூட்டத்தை அவர் கூட்ட வேண்டும்.

1. ஜனவரியில் அது நடத்தப்படுவதால் அதற்கு அவர் ஆளுநரின் முன் அனுமதி பெற வேண்டும்.
2. டிசம்பர் மாதக் கூட்டம் நடத்தப்படாமையாலும் சபையின் கொடுப்பனவுகள், நிலுவையில் அல்லாடப் போகின்றன.
3. நாளை மறுதினம் தொடக்கம் வரவு - செலவுத் திட்டம் அங்கீகரிக்கப்படும் வரை, ஒவ்வொரு செலவினத்துக்கும் ஆளுநர் அங்கீகாரம் பெற வேண்டி இருக்கும்.
4. சபைக் கூட்டத்தை ஒழுங்கு முறையாகக் கூட்டாமைக்காக ஆளுநரின் ஒழுங்கு நடவடிக்கை கூட, மேயர் மீது பாய இடம் உண்டு.
5. இதுவரை ஆதரவும் முண்டும் தந்த தமது கட்சியை மதிக்காமல், அபவாதக் குற்றச்சாட்டுகளை தமது கட்சி மீது சூட்சுமமாக சுமத்தச் செய்தமை, ஆதரவு கேட்டு தம்முடன் தொடர்பு கொள்ள மறுத்தமை போன்ற காரணங்களினால் மணிவண்ணன் மீது ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா செமக் கடுப்பில் இருக்கின்றார். நேற்று மாலை ஸ்ரீதர் தியேட்டரில் நடந்த ஒரு உள்கட்சிக்கூட்டத்தில்மணிவண்ணனுக்காகப் பரிந்து பேச முயன்ற கட்சியினர் மீது அமைச்சர் டக்ளஸ் சீறி விழுந்தார் எனவும் அறிய வந்தது.

கடைசி நேரத்தில் அமைச்சரின் தாள் பணிந்து, மணிவண்ணன் இறுதிச் சுந்தர்ப்ப 'சுமாளிபிகேஷன்' ஏதும் செய்தாலே தவிர, அவருக்கு மீட்சி இல்லை என்பது தான் இப்போதைய நிலைமை. ஆனாலும் 'எதிரிக்கு எதிரி நண்பன்' என்ற கோதாவில், அமைச்சர் டக்ளஸ் எதிர்ப்பதால் மேயர் மணிவண்ணனை தமது எல்லைக்கு உட்பட்ட வகையில் ஆளுநர் அரவணைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. தந்திரோபாயங்கள் தெரிந்த மணிவண்ணன் தேவைப்பட்டால் ஆளுநரின் முன்னாள் சுருண்டாலும் கூட ஆச்சரியம் இல்லை.

இதற்கிடையில் -

யாழ் மாநகர சபையின் செயலாளருக்கு இன்றுதான் சபையில் கடைசி வேலை நாள். திங்கட்கிழமை - இரண்டாம் திகதி - அவர் மாகாண சபைக்கு மாற்றலாகிச் செல்கின்றார்.

வரவு - செலவு திட்டத்துக்கான இரண்டாவது சமர்ப்பணக் கூட்டத்தை ஜனவரி 4ஆம் திகதிக்கு முன்னர் நடத்துவதற்கு ஆளுநரிடம் இன்று அனுமதி பெற்று, அதற்கான அறிவித்தலை உறுப்பினர்களுக்கு இன்றைய தினமே அனுப்பாவிட்டால், இனி புதிய செயலாளர் இரண்டாம் திகதி வந்து பதவி ஏற்று, நான்காம் திகதிக்கு முன் நடத்தப்பட வேண்டிய கூட்டத்திற்கு கூட்ட அறிவித்தல் அனுப்புவது சாத்தியமற்றது என்ற சிக்கலும் உள்ளது.

மொத்தத்தில் யாழ் மாநகர சபை பாவம். அதன் நிலைமை பரிதாபம்தான்.

- மின்னல் -

## பிற கட்சிகளை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தற்போது நிலுவையில் உள்ளதை கருத்தில் கொண்டு வடக்கில் உள்ள பல தமிழ் கட்சிகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து அரசியல் கூட்டணிக்காக முன் வந்துள்ளன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான சுமந்திரன் எம்.பியின் கருத்துப்படி, இலங்கைத் தமிழ் அரசு கட்சி தம்முடன் முன்னர் இருந்த அரசியல் தரப்புகள் மற்றும் குழுக்களுடன் அத்தகைய கூட்டணியை அமைக்க மறுத்துவிட்டது. இருப்பினும், தமிழரசு - ரெலோ - புளொட் ஆகியவற்றின் பாரம்பரிய கூட்டணி தொடரும் என்றார் அவர்.

"தேர்தல் கூட்டணிக்காக மற்ற கட்சிகளுடன் கூட்டணி வைப்பதில்லை என்று எங்கள் அரசியல் குழு முடிவு எடுத்தது" - என்று அவர் கூறினார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். (ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி), நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரனின், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தமிழ் மக்கள் கூட்டணி, என். ஸ்ரீகாந்தா தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சி ஆகியனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட முனைந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

## முப்பதாயிரம் அரச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

60 வயது பூரணமான அதிகமான அரச ஊழியர்கள் ஒரே தடவையில் ஓய்வு பெற்றுச் செல்வதால் அந்த வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

நாடளாவிய ரீதியில் அரசாங்க ஊழியர்கள் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஓய்வு பெற்று செலகின்றனர். இவர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசாங்கம் உரிய வேலைத் திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

எவ்வாறெனினும் ஒரே தடவையில் இந்தளவு அதிக எண்ணிக்கையிலான அரசாங்க ஊழியர்கள் ஓய்வு பெற்று செல்வதால் அரச சேவையில் எத்தகைய வீழ்ச்சியும் இடம்பெறாது. அதற்கு தேவையானநடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். - என்றார்.

அரசாங்க ஊழியர்கள் ஓய்வு பெறும் வயதெல்லையை கடந்த அரசாங்கம் 65 என அறிவித்தது.

அதனால் 60 வயதைத் தாண்டியோர் தொடர்ந்து பணியில் இருந்தனர். ஆனால் தற்போதைய அரசாங்கம் அந்த ஓய்வு பெறும் வயதெல்லையை 60 ஆக மீண்டும் குறைத்து அறிவித்தது. முன்னைய அறிவிப்பால் 60 வயதைத் தாண்டியும் சேவையில் இருப்போர் இந்த வருடம் 31ஆம் திகதியுடன் ஓய்வு பெற வேண்டும் என்றும் தற்போதைய அரசாங்கம் அறிவித்தது. அதன்படி, 30ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசாங்க ஊழியர்கள் நாளையுடன் ஓய்வு பெறவுள்ளனர்.

கடந்த வருடத்தில் ஓய்வு பெற வேண்டிய அரசாங்க ஊழியர்கள் ஓய்வு பெற்றுச் செல்லாமை காரணமாகவே இந்த வருடம் அரச ஊழியர்கள் இந்தளவு அதிக எண்ணிக்கையில் ஒரேயடியாக சமூகச் ஓய்வுபெற்றுச்செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

## 24 லட்சத்திற்கும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்கொண்டுள்ளனர் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நெருக்கடியின் தொடக்கத்தில் ஏழ்மையான குடும்பங்கள் தங்கள் வருமானத்தில் கிட்டத்தட்ட பாதியை இழந்ததாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்குடும்பங்கள் தமது சொத்துக்களை விற்று கடனாளிகளாக ஆகியுள்ள நிலையில், அவர்களின் உணவு வேளையை குறைத்து, பிள்ளைகளின் பாடசாலை போக்குவரத்தை நிறுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும் அந்த ஆய்வு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)






காலைக்கதிர் Kalaikkathir

# பொதுமக்களால் மீட்கப்பட்ட மீனவர்களை தமிழகத்துக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை!



படகு இயந்திரம் பழுதடைந்த நிலையில் தமிழகம் – நாகை மாவட்ட மீனவர்கள் 4 பேர் யாழ்.வல்வெட்டித்துறை – ஆதிகோவிலடி கடற்கரையில் தஞ்சமடைந்த நிலையில் பொதுமக்களால் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதுடன், மீனவர்களை மீளவும் தமிழகத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

மீன் பிடித்துக் கொண்டிருந்த நாகை மீனவர்களின் வலைகளை இலங்கை மீனவர்கள் அறுத்து எடுத்து சென்றுள்ளனர்.

இந்நிலையில் அதனை மீட்பதற்காக தமிழகம் – நாகை மீனவர்கள் இலங்கை மீனவர்களைப் பின்தொடர்ந்து வந்த நிலையில் படகு இயந்திரம் பழுதடைந்து வல்வெட்டித்துறை – ஆதிகோவிலடி கடற்கரையில் தஞ்சமடைந்துள்ளனர்.

நாகை மாவட்டம் கோடியக்கரை மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடந்த 27ஆம் திகதி மயிலாடுதுறை மாவட்டம் பெருமாள் பேட்டை சேர்ந்த சரவணன், பாண்டியன் உள்ளிட்ட 4 மீனவர்கள் பைப்பர் படகில் மீன் பிடிக்க கடலுக்கு சென்றிருந்தனர் எனவும், இந்நிலையில் புதன்கிழமை நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கை மீனவர்கள் தங்கள் பகுதியில் மீன் பிடிக்க கூடாது என விரட்டி அடித்ததுடன் தமது வலைகளை அறுத்து எடுத்துச் சென்றனர் எனவும் தஞ்சமடைந்துள்ள மீனவர்கள் கூறுகின்றனர்.

பல லட்ச ரூபா மதிப்பிலான மீன்பிடி வலைகளை இலங்கை மீனவர்கள் எடுத்துச்சென்ற நிலையில் அந்த வலைகளை தேடி யாழ்ப்பாணம் கடற்கரை பகுதிக்கு வந்தபோதே தமது படகில் உள்ள இயந்திரம் பழுதடைந்து தாம் தஞ்சமடைந்தனர் எனவும் கூறியிருக்கின்றனர்.

தஞ்சமடைந்த மீனவர்களை மீட்ட வல்வெட்டித்துறை – ஆதிகோவிலடி மக்கள் அவர்களுக்கு உணவு வழங்கியதுடன் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கும், இலங்கை கடற்படையினருக்கும் தகவல் வழங்கியதுடன் பாதுகாப்பாக வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்நிலையில் தஞ்சமடைந்த மீனவர்களை உடனடியாக தமிழகத்திற்கு திருப்பி அனுப்ப பொலிஸாருடன் இணைந்து யாழ்.இந்திய துணைத் தூதரகம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

# அமெரிக்காவினால் இலங்கைக்கு மருத்துவ பொருள்கள் நன்கொடை!



அமெரிக்காவால் இலங்கைக்கு மருத்துவ பொருள்கள் நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஹார்ட்டுஹார்ட் இன்டர்நேஷனல் அமைப்பால் 72 லட்சம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான மருத்துவ பொருள்கள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

இந்த விடயத்தை அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் மஹிந்த சமரசிங்க தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

ஏற்கனவே பொருளாதார நெருக்கடியால், நாட்டில் மருந்துப் பொருள்கள் பற்றாக்குறையாக உள்ள நிலையில், இந்த நன்கொடை அந்த நெருக்கடியை சற்று நிவர்த்தி செய்யும் என நம்பப்படுகின்றது.

# நயவஞ்சக அரசியல் இலக்குகளை ஒருபோதும் ஆதரிக்க மாட்டோம்!

## லிபரல் சகோதரத்துவம் அமைப்பு திட்டவட்டம்

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள முயற்சிக்கும் இவ்வேளையில் நாட்டில் ஸ்திரமற்ற நிலையை உருவாக்கி மக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தும் நயவஞ்சக அரசியல் இலக்குகளை ஒருபோதும் ஆதரிக்க மாட்டோம் என லிபரல் சகோதரத்துவம் என்ற அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

அண்மைக்காலமாக எமது இயக்கம் உட்பட பல இளைஞர் அமைப்புக்களின் பெயர்கள் மற்றும் சின்னங்களைப் பயன்படுத்தி, காலிமுகத்திடல் போராட்ட களம் தொடர்பாகச் சில கருத்துக்களை வெளியிட்டு போலியான செய்தி ஒன்று பரவி வருகின்றது.

காலி முகத்திடல் போராட்ட வலயத்தை பண்டிகை வலயமாக மாற்றக்கூடாது என்ற இந்த அறிவிப்பை ஓர் இயக்கமாக நாங்கள் ஆதரிக்கவில்லை என்பதையும், காலி முகத்திடல் போராட்ட வலயத்தை ஒரு சுற்றுலா வலயமாக மாற்றுவதன் மூலமாக அதிக அந்நிய செலாவணியை நாட்டுக்கு கொண்டுவருவதில் எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

நாடு கடுமையான பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள முயற்சிக்கும் இவ்வேளையில் நாட்டில் ஸ்திரமற்ற நிலையை உருவாக்கி மக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தும் நயவஞ்சக அரசியல் இலக்குகளை ஒருபோதும் ஆதரிக்க மாட்டோம் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம். மேலும் அத்தகைய போராட்டத்துக்கான எவ்வித தேவையும் இந்த வேளையில் இல்லை. இத்தகைய கேவலமான அரசியல் தந்திரங்களுக்கு எங்கள் இயக்கத்தின் பெயரையும் சின்னத்தையும் பயன்படுத்துவதை வன்மையாகக் கண்டிக்கிறோம். இதுபோன்ற செயல்களுக்கு எதிராக தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மலையக மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உறுதிமொழி நிறைவேற்றப்படவேண்டும்!

## வேலுகுமார் எம்.பி. வலியுறுத்து



'தேசியப் பட்டியல் ஆசனம்' என்ற தமக்கான அரசியல் உரிமையை வென்றெடுப்பதில் தமிழ் முற்போக்கு கூட்டணி அசமந்த போக்குடன் செயற்பட்டு வருவதை அனுமதிக்க முடியாது. எனவே, மலையக மக்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழி நிறைவேற்றப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் கூட்டணிக்கு இது பெரும் பின்னடைவாக அமையும். என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு –

ஐக்கிய மக்கள் சக்தியுடன், பல சுற்று பேச்சுகளின் பின்னர் முக்கிய சில விடயங்களை முன்வைத்தே கூட்டணி அமைக்கப்பட்டது.

இதில், ஐக்கிய மக்கள் சக்திக்கு கிடைக்கும் தேசியப் பட்டியல் ஆசனங்களில் , தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு கட்டாயம் ஓர் இடம் ஒதுக்கப்படும் என்ற உறுதிமொழியும் வழங்கப்பட்டிருந்தது.

பொதுத்தேர்தலில் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு அமோக வெற்றி கிடைத்தது. நுவரெலியா, கண்டி, பதுளை மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெற்றது.

அதேபோல இரத்தினபுரி, கேகாலை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களிலும் கூட்டணியின் வேட்பாளர்கள் குறிப்பிட்டுக்கூறக்கூடியளவுக்கு வாக்குகளைப் பெற்றனர். எனவே, தேசியப் பட்டியலை பெறுவதில் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு எல்லா விதத்திலும் உரிமை இருந்தது. மக்கள் ஆதரவும் கிட்டியது.

ஆனால் தேர்தலின் பின்னர், ஐக்கிய மக்கள் சக்தி எமக்கு வழங்கிய வாக்குறுதியை மீறியது. மக்கள் நலன்கருதி அமைதி காத்தோம். தேசியப்பட்டியலொன்று வெற்றிடமாகும் சந்தர்ப்பத்தில் அந்த வாய்ப்பு வழங்கப்படும் எனவும் கூறப்பட்டது.

அதுவும் நடப்பதாகத் தெரியவில்லை. கூட்டணி என்ற போர்வையில் சரணாகதி அரசியல் நடத்துவதற்கு நான் தயாரில்லை. மக்கள் அதற்காக எனக்கு வாக்களிக்கவும் இல்லை.

தேசியப் பட்டியலை வென்றெடுப்பதில் தமிழ் முற்போக்கு கூட்டணி ஆமை வேகத்தில் செயற்படுவதை அனுமதிக்க முடியாது. மக்களும் அதிருப்தியுடனேயே உள்ளனர். – என்றார்.

# அக்கரைப்பற்று நீதிமன்றத்திற்குத் தீ வைத்தமை தொடர்பில் மூவர் கைது!



அக்கரைப்பற்று நீதிமன்ற கட்டட பதிவேட்டு அறைக்கு தீவைத்த சம்பவம் தொடர்பாக கோளாவில் பகுதியைச்சேர்ந்த யாழ் ஆவா குழுவுடன் இயங்கி வந்த 24 வயதுடைய ஒருவர் உட்பட 3 இளைஞர்களை ஹெரோயின் போதைப்பொருளுடன் புதன்கிழமை நீலாவணை பகுதியில் வைத்து கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 21 ஆம் திகதி அதிகாலை நீதிமன்ற கட்டடத்துக்கு இனம்தெரியாதோரால் தீவைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான பொலிஸ குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்துவந்தனர்.

இதன்போது நீதிமன்ற பகுதிக்கு அருகிலுள்ள வீடுகளில் பொலுத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி.கமரா மூலம் நீதின்ற கட்டடத்துக்கு முகமூடி அணிந்தவாறு 3 பேர் உள்நுழைந்தமை தெரியவந்தது.

இதனையடிப்படையாக மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் நீலாவணை பகுதியில் பதுங்கிருந்த அக்கரைப்பற்று கோளாவில் பகுதியைச் சேர்ந்த 24, 20, 17 வயதுடைய மூன்று பேரை சம்பவதினமான புதன்கிழமை இரவு பொலிஸார் கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்ட 24 வயதுடையவருக்கு 9 நீதிமன்ற பிடிவிறாந்து உள்ளதுடன் இவர் யாழ் ஆவா குழுவுடன் அங்கிருந்து செயற்பட்டு வந்துள்ளார் எனவும் அவரின் நண்பர்களான 20, 17 வயதுடைய அதேபகுதியைச் சேர்ந்தவர்கள் ஒன்றிணைந்து இந்தத் தீ வைப்பு சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர் எனப் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவ்வாறு கைது செய்தவர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர் படுத்துவதற்கு நடவடிக்கை எடுககப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வருமுன் காப்போம்!

**உலகெங்கும் கொவிட் தொற்று – குறிப்பாக வைரஸின் புதிய திரிவு பரவும் – பேராபத்து நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.**

**ஆனால், இந்தப் பேராபத்துக் குறித்து இலங்கை, அதன் ஆட்சிப் பீடம், சுகாதாரப் பிரிவு போன்ற தரப்புகள் சிரத்தை காட்டுவனவாகத் தெரியவில்லை. பொது மக்களின் போக்குக் கூட அப்படித்தான் தென்படுகின்றது.**

**ஏற்கனவே கொவிட் தொற்றை வெற்றிகரமாகத் தாண்டியமையால் ஏற்பட்ட மிதப்பு – அலட்சியம் – அசிரத்தை – தாராளமாக நிலவுவதாகத் தோன்றுகின்றது.**

**ஆனால், சீனா, ஜப்பான், தென்கொரியா, தாய்வான், ஹொங்கொங் போன்ற நாடுகளில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அசாதாரணமாக அண்மையில் அதிகரித்து வருகிறது. அங்கு பாதிப்புகளும் கூட மோசமானவையாக உள்ளன.**

**நேற்று முன்தினம் புதன்கிழமை மட்டும் சுமார் ஐந்து லட்சத்து 25 ஆயிரம் புதிய தொற்றாளர்கள் இந்த நாடுகளில் இனங்காணப்பட்டுள்ளனர். இதன் காரணமாக மீண்டுமொரு கொவிட் அலையை எதிர்கொள்ள நேரிடுமா என்ற அச்சம் நிபுணர்கள், அரசுகள் மற்றும் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.**

**கொவிட் தொற்று அதிகரித்துள்ள நாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் பயணிகளை ஒரு பொறிமுறையின் கீழ் நாட்டுக்குள் அனுமதிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.**

**ஏற்கனவே நமது அயல்நாடான இந்தியா உட்பட தெற்காசிய மற்றும் தென்கிழக்காசிய நாடுகள் இதனை நடைமுறைப்படுத்தத் தொடங்கி விட்டன.**

**ஏனைய நாடுகளில் ஏற்பட்டுள்ள கொவிட் பரவலால் மக்கள் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று பொதுவாகக் கூறப்படுகின்ற போதிலும், வருமுன் காப்பதற்கு நாடு தயாராக இருக்க வேண்டும்.**

**தடுப்பூசிகளை முழுமையாகப் பெற்றுக் கொண்டவர்களும் சுகாதார வழிமுறைகளை முறையாக பின்பற்றி அவதானமாக செயற்பட வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தரும் ஆலோசனை மிகுந்த கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.**

**பொருளாதார நெருக்கடிகளால் நாட்டின் சுகாதாரத்துறை பெரும் சவால்களை எதிர்கொண்டுள்ளது. எனவே சுகாதார அமைச்சும் புத்திசாதுரியமாக இப்போது நடக்க வேண்டும். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்க வேண்டும்.**

# யாழில். போதை ஊசியால் இளைஞன் ஒருவர் சாவு!

அளவுக்கு அதிகமாக போதைப்பொருளை ஊசி மூலம் உட்செலுத்திக்கொண்ட இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞனுடன் போதைப் பொருளை உட்செலுத்திக்கொண்ட மூவரை பொலிஸார் தேடி வரும் நிலையில் அவர்கள் தலைமறைவாகியுள்ளனர்.

யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் இளைஞனொருவரை, திடீர் சுகவீனமுற்றுள்ளார் என யாழ்.போதனா வைத்தியசாலையில், சேர்த்துள்ளனர். அங்கு சிகிச்சை பலனின்றி இளைஞன் உயிரிழந்துள்ளார்.

அதனை அடுத்து மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்று பரிசோதனையில், இளைஞன் அளவுக்கு அதிகமாக போதைப்பொருளை ஊசி மூலம் உடலினுள் உட்செலுத்திக் கொண்டமையாலேயே மரணம் சம்பவித்துள்ளது என கண்டறியப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், குறித்த இளைஞனும், அவரது நண்பர்கள் மூவருமாக போதைப் பொருளை ஊசி மூலம் உடம்பினுள் உட்செலுத்திக்கொண்டுள்ளனர்.

நண்பர்கள் மூவரும், போதைப்பொருளை உட்செலுத்திய பின்னர், மிகுதியானதை முழுவதுமாக உயிரிழந்த இளைஞன் உட்செலுத்தியுள்ளார்.

அவ்வாறு அளவுக்கு அதிகமாக போதைப் பொருளை உட்செலுத்திக்கொண்டமையால், மயக்கமுற்று விழுந்த இளைஞனை போதையில் மயங்கி உள்ளார் என நினைத்து, போதை தெளியும் எனக் காத்திருந்துள்ளனர்.

சுமார் 2 மணி நேரம் ஆகியும் இளைஞன் அசைவற்றுக் காணப்பட்டமையால் , இளைஞனை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். அங்கு சிகிச்சை பலனின்றி இளைஞன் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் கோப்பாய் பொலிஸார், உயிரிழந்த இளைஞனுடன், சம்பவ தினத்தன்று போதைப்பொருளை ஊசி மூலம் உட்செலுத்திய ஏனைய மூவரை அடையாளம் கண்டுள்ள நிலையில் அவர்கள் தலை மறைவாகியுள்ளனர்.

தலைமறைவாகியுள்ள மூவரையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர் ஏனைய மூவரையும் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தலே, அவர்களுக்கு போதைப் பொருள் வழங்கும் நபர்களை அடையாளம் காணமுடியும் எனப் பொலிஸார் தெரிவித்தனர். அதேவேளை, யாழ்ப்பாணத்தில் போதைப் பொருளை ஊசி மூலமாக உட்செலுத்தியதில் இதுவரை 15 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் எனவும், உயிரிழந்தவர்கள் 30 வயதுக்கும் குறைந்தவர்கள் என வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சீன மக்களின் நன்கொடை யாழ். மக்களுக்கு வழங்கல்!




சீன மக்களால் இலங்கை மக்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட உலர் உணவுப் பொதிகளில், யாழ்ப்பாண மக்களுக்கான நிவாரண பொதிகள் நேற்று (வியாழக்கிழமை) யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான சீனாவின் பிரதித் தூதர் ஹூவெய் கலந்துகொண்டு உலர் உணவுப் பொதிகளை வழங்கிவைத்தார்.

யாழ். மாவட்டத்தில் 1,320 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்ட நிலையில் முதல் கட்டமாக நேற்று (வியாழக்கிழமை) யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குற்பட்ட 100 பயனாளிகளுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக் கப்பட்டது.நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட செயலர் க.மகேசன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேன, சீனத்தூதரக அரசியல் விவகார அதிகாரி, யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். மாவட்ட தலைவர் கே.பாலகிருஸ்ணன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சஹ்ரானுடன் தொடர்பு வைத்திருந்த இருவர் தமிழகத்தில் கைதாகினார்கள்!

ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் ஹாசிமுடன் தொடர்பு வைத்திருந்த இருவர் இந்திய தேசிய புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் 23ஆம் திகதி, தமிழகம் – கோயம்புத்தூரில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சந்தேக நபர்களுடன் தொடர்பு கொண்டிருந்ததாகக் கூறப்படும் ஷேக் ஹிதாயத்துல்லா மற்றும் இந்தியாவில் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்தும் திட்டங்களில் பங்கேற்றதாகக் கூறப்படும் சனோபர் அலி ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி இலங்கையில் 250 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் மூளையாக செயற்பட்டிருந்த சஹ்ரான் ஹாஷிமுடன், ஐஎஸ் அமைப்பில் உறுப்பினரான ஷேக் ஹிதாயத்துல்லா தொடர்பை பேணியதாக இந்திய புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஹிதாயத்துல்லா மற்றும் சனோபர் அலி ஆகிய இருவரும் தமிழகத்தில் வைத்தே கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்தேகநபர்கள் 2022 பெப்ரவரியில் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வனப்பகுதியின் ஆசனூர் மற்றும் கடம்பூர் பகுதிகளில் உள்ள வனப்பகுதியின் உட்பகுதியில் குற்றவியல் சதித்திட்டத்தில் ஈடுபட்டமை விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

அங்கு அவர்கள் பயங்கரவாதச் செயல்களுக்கான தயாரிப்புக்களை மேற்கொண்டதாகவும் விசாரணையாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கடந்த 2019 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தொடர்புகள் தொடர்பாக, இந்திய தேசிய புலனாய்வு பிரிவால், விசாரிக்கப்பட்ட ஜமீஷா முபீன் என்பவர், கோயம்புத்தூர் உக்கடத்தில் உள்ள கோட்டை ஈஸ்வரன் கோயில் அருகே கடந்த ஒக்டோபர் 23 ஆம் திகதி காலை, தாம் ஓட்டிச் சென்ற மகிழுந்தின் இருந்த இருந்த எரிவாயு கொள்கலன் வெடித்துச் சிதறியதால் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்தார். உயிரிழந்தவர் இந்த வெடிப்பு வழக்கில் முதன்மை சந்தேகநபராக பதிவு செய்யப் பட்டுள்ளார்.

# தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பில் இதுவரை 90 பேரின் வாக்குமூலம் பதிவு!

தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பில் இதுவரை 90 பேரின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பல பிரிவுகளின் ஊடாக இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தினேஷ்ஷாப்டரின்மரணம்தொடர்பில் விசாரணை செய்யும் அதிகாரிகளுக்கும் பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

மரணம் தொடர்பிலான விசாரணைகள் மற்றும் அதன் முன்னேற்றம் தொடர்பாகப் பொலிஸ் மா அதிபரிடம் கேட்டறிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், விசாரணையில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் பொலிஸ் மா அதிபரிடம் உண்மைகளை விளக்கியிருந்தார்.



# சாவகச்சேரி இந்து கல்லூரிக்கு சீன பதில் தூதுவர் விஜயம்!

வட பகுதிக்கு வருகை தந்துள்ள சீன பதில் தூதுவர் ஹூ வோய், தலைமையிலான குழுவினர் யா / சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு விஜயம் செய்து கல்லூரிக்கான உதவித்திட்டங்களை வழங்கி வைத்தனர்.

பாடசாலைக்கு நேற்று (வியாழக்கிழமை) காலையில் வருகை தந்த சீன பதில் தூதுவர் தலைமையிலான குழுவினர் 'பாண்ட் வாத்திய' இசையோடு வரவேற்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது.

இதன் போது 40 லட்சம் ரூபா பெறுமதியான மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் சிமாட் வகுப்பறைக்கான உபகரணங்கள் ஆகியவறலறை சீன பதில் தூதுவர் பாடசாலைச் சமுகத்திடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் சீன தூதரக அதிகாரிகள், தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருபாகரன், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# ஜனவரி மாத இறுதி வாரத்தைக் கறுப்பு போராட்ட வாரமாக பிரகடனப்படுத்த அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முடிவு!

ஜனவரி இறுதி வாரத்தை கறுப்பு போராட்ட வாரமாக பிரகடனப்படுத்தவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் தன்னிச்சையான வரி திருத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

எதிர்ப்புத் தெரிவிக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாக நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் 20 ஆயிரம் வைத்தியர்களிடம் மனுவொன்றில் கையெழுத்து சேகரிக்கப்பட்டு வருவதாக சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி ஜனவரி 10ஆம் திகதி கையொப்பமிடப்பட்ட மனு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்படவுள்ளது.




# நட்பு ரீதியிலான உதவிகளை வருங்காலத்தில் சீனா செய்யும்

ஹூவெய் பகிரங்க அறிவிப்பு



சீனா நாடும், இலங்கை நாடும் கலாசாரம் மதம் தாண்டி நட்பு ரீதியான உதவிகளை எதிர்வரும் காலங்களில் செய்வோம். இலங்கைக்கான சீனாத் தூதுவர் ஹூவெய் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை, சீனா ஆகிய இருநாட்டின்நட்புஎன்பதுநட்பின் நண்பன் அந்தவகையில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.

பாடசாலை மாணவர்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிப்பு செய்வதற்கான உணவுப்பொதிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இவை சீனாத்தூதரகத்தின் நிகழ்ச்சித் திட்டமாக காணப்படுகின்றன.

மேலும் ஒன்பது ஆயிரம் மெற்றிக்தொன் டீசல் எரிபொருள்கள் கிடைக்கப்பெறவுள்ளன. அவை யாழ்ப்பாண விவசாயிகள், கடற்றொழில் மீனவர்கள் ஆகியோர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

மேலும் பத்தாயிரம் மெற்றிக்தொண் அரிசி இலங்கைக்கு சீனா நாடு பெற்றுக் கொடுக்கவிருக்கின்றது. இந்த அரிசிகள் வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவிருக்கின்றன என்று தெரிவித்தார்.

# மன்னாரில் தொற்று நோய் அபாயத்தை கட்டுப்படுத்தும் வேலைத் திட்டம் தொடர்பாக விசேட கலந்துரையாடல்!

மன்னார் மாவட்டத்தில் தொற்று நோய் அபாயத்தை கட்டுப்படுத்தும் வேலைத் திட்டம் தொடர்பாக ஆராய சுகாதார அமைச்சின் விசேட குழுவொன்று மன்னார் விஜயம் செய்துள்ளது.

இதன்படி, அங்கு தொற்று நோய் அபாயத்தைக் கட்டுப்படுத்தும் வேலைத் திட்டம் தொடர்பாக ஆராயும்



விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

கடந்த புதன்கிழமை மாலை மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இந்தக் கலந்துரையாடல் இடம் பெற்றது.

மன்னார் மாவட்டத்தில் அதிகரித்து காணப்படும் போதைப்பொருள் கடத்தல் மற்றும் இந்தியாவுடனான சட்ட ரீதியற்ற கடல் போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு காரணங்களை முன்னிலைப்படுத்தி இந்த தடுப்பு நடவடிக்கை ஆராயும் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

சுகாதார அமைச்சின் பொது சுகாதார சேவைகள் மேலதிக பணிப்பாளர் வைத்தியர் லஷ்மி சோம துங்க தலைமையில் உயர்மட்ட குழுவில் பாலியல் நோய் மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிகழ்ச்சி திட்டம் பணிப்பாளர் வைத்தியர் ரசாஞ்சலி கெட்டியாராட்சி, சுகாதார அமைச்சின் முன்னாள் காச நோய் தடுப்பு நிகழ்ச்சித் திட்ட பணிப்பாளர், தற்போது நிகழ்ச்சி திட்ட செயலாளர் மற்றும் மேற்பார்வை உத்தியோகத்தர் காந்தி ஆரிய ரத்ன ,மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த. விநோதன் உட்பட மன்னார் மாவட்ட தொற்றுநோய்த் தடுப்பு பிரிவு வைத்தியர்கள் மற்றும் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைக்கு இணைந்து பணியாற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர் மற்றும் நிறுவனங்களில் மாவட்ட இணைப்பாளர்கள் இதில் கலந்துகொண்டனர்.

# மன்னார் தாராபுரம் பகுதியில் விபத்து!

## இளம் குடும்பஸ்தர் பலி

மன்னார் தலைமன்னார் பிரதான வீதி, தாராபுரம் பகுதியில் நேற்று (வியாழக்கிழமை) காலை இடம்பெற்ற விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மன்னார் பனங்கட்டுகொட்டு பகுதியை சேர்ந்த இளம் குடும்பஸ்தரான ஆனந்த் கன்பியூசியஸ் விஜய் – (வயது 32) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மன்னாரில் இருந்து பேசாலை நோக்கி பயணித்த பொலிஸ் டிபென்டர் ரக வாகனமும், பேசாலை வீதியூடாக மன்னார் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த இளம் குடும்பஸ்தர் ஒருவரின் மோட்டார் சைக்கிலும் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளன.

இந்தவிபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் வீதியில் தூக்கி வீசப்பட்ட நிலையில், படுகாயமடைந்த நிலையில், வீதியால் சென்றவர்களின் உதவியுடன் மீட்கப்பட்டு அம்புலன்ஸ் மூலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

எனினும் அந்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன்,மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ரஷ்யாவின் ரெட் விங்ஸ் விமான சேவை நேற்று முதல் ஆரம்பம்!

ரஷ்யாவின் ரெட் விங்ஸ் விமான சேவை நேற்று (வியாழக்கிழமை) முதல் இலங்கைக்கான விமான சேவையை ஆரம்பித்துள்ளதாக சிவில் விமான சேவைகள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

ரெட் விங்ஸ் விமான சேவைக்கு சொந்தமான விமானம் ஒன்று நேற்று மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

இதற்கமைய நேற்று முதல் வாரத்துக்கு இரண்டு முறை இலங்கைக்கு விமான சேவைகள் மேற்கொள்ளப்படும் என சிவில் விமான சேவைகள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த விமானத்தில் 404 ரஷ்ய சுற்றுலா பயணிகள்



இலங்கைக்கு வந்தனர் என சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் உபுல் தர்மதாஸ குறிப்பிட்டுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# சொல்ஹெய்மிற்கு இங்கே என்ன சோலி?

அக்கரை / அக்கறை அலசல்



என்.சத்தியமூர்த்தி



இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்து செய்திகள் பரவத் துவங்கியதுமே, தலைநகர் கொழும்பில் பிரசன்னமானார், முன்னாள் நோர்வே அமைச்சரும் அமைதிப் பேச்சுவார்த்தைக்கான அனுசரணையாளருமான எரிக் சொல்ஹெய்ம். தற்போது, அனைத்து கட்சி பேச்சுவார்த்தை, அதனை தொடர்ந்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தமிழர் கட்சிகளுடனான உரையாடல் ஆகியவற்றின் நடுவிலே, சொல்ஹெய்ம், மீண்டும் ஒரு முறை கொழும்புவிற்கு விஜயம் மேற்கொண்டார்.

முதல் முறை, ஜனாதிபதி ரணிலின் சுற்றுச்சூழல் ஆலோசகராக புதிய உருவம் எடுத்து வந்த சொல்ஹெய்ம், இரண்டாவது தடவை வந்த போது, அந்த முகமூடியை கழற்றிவிட்டு, நாட்டு மக்களுக்கு அறிமுகமான அவரது பழைய முகத்துடன் அவதானித்தார். என்றாலும், தனக்கும் ஜனாதிபதி, உள்நாட்டில் துவக்கியுள்ள பேச்சுவார்த்தைகளுக்கும் சம்பந்தமில்லை என்றும் தொடர்ந்து கூறியுள்ளார். இது, இருட்டை கொண்டு ஓட்டை அடைக்கும் வேலை. காரணம், அவர் கூறியதை யாரும் நம்பவில்லை. நம்பப் போவதில்லை.

தனது முதல் விஜயத்தில், சொல்ஹெய்ம், ஜனாதிபதி ரணில், அரசின் முதுகெலும்பான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் இளைய தலைமுறை இரட்டையர்களான சுமந்திரன்–சாணக்கியன் ஆகியோரையும் சந்தித்தார். இதில், ரணிலுடனான பேச்சுவார்த்தை, சுற்றுசூழல் குறித்ததாகவே இருந்ததாக வைத்துக்கொள்வோம். மஹிந்தாவுடனான சந்திப்பும், மரியாதை நிமித்தமானது என்றும் கருதி கொள்ளலாம்.

ஆனால், சொல்ஹெய்ம், அரசு மற்றும் விடுதலை புலிகள் இயக்கத்திற்கு இடையேயான பேச்சுவார்த்தைக்கு அனுசரணையாளராக இருந்த காலகட்டத்தில், சுமந்திரன் அரசியலுக்கு வந்திருக்கவில்லை. தற்போது 32 வயதே ஆகியிருக்கும் சாணக்கியன், அந்த காலகட்டத்தில், பள்ளிகூட மாணவனாக இருந்திருப்பார். ஆனால், செய்தியாளர்கள் கேட்டபோது, அவர்கள் இருவரையும் அண்மைகாலத்தில், தான் சில – பல முறைகள் வெளிநாடுகளில் சந்தித்தார் எனவும் சொல்ஹெய்ம் கூறினார். அதன் தொடர்ச்சியாக, மரியாதை நிமித்தமாக மட்டுமே அவர்கள் இருவரையும் ஒரு சேர கொழும்பில் சந்தித்தார் என அவர் கூறினார்.

அதாவது, சுமந்திரன் – சாணக்கியன் இரட்டையரிடம் தான் அரசியல் பேசவில்லை என்று மக்கள் நம்ப வேண்டும் என்று சொல்ஹெய்ம் எதிர்பார்த்தார். இது காதில் பூ சுற்றும் வேலை.

### எங்கப்பன் குதிரில் இல்லை

அண்மையில், இரண்டாவது ரவுண்ட் விஜயத்தின் போது, சொல்ஹெய்ம் சம்பந்தன், சஜித் பிரேமதாஸ மற்றும் மலையக தமிழர் தலைவர் மனோ கணேசன் ஆகியோரைச் சந்தித்தார். இதில், மனோ கணேசன் வழக்கம் போலவே, தனது சந்திப்பு குறித்து தனது முகநூலில் பதிவு செய்திருந்தார். அப்போது, தான் சொல்ஹெய்மிடம் கூறியதாக அவர் பதிவிட்ட கருத்துக்கள், இனப்பிரச்சினை குறித்தவை மட்டுமே. ஆனால், தன்னிடம் சொல்ஹெயம், இனப்பிரச்சினை குறித்து விவாதிக்கத் தான் வரவில்லை என்று கூறினார் என மனோ கணேசன் பதிவேற்றவில்லை.

அது போன்றே, சம்பந்தனுடனான சந்திப்பின் போது, உடனிருந்த சுமந்திரன் வெளியிட்டார் என வந்த பத்திரிகை செய்திகளும், இனப்பிரச்சினை குறித்தவையே. அதனை சுமந்திரன் மறுக்கவில்லை. சொல்ஹெய்ம் மட்டுமே பொத்தம் – பொதுவாக, தான் இனப்பிரச்சினை குறித்து கதைப்பதற்கு இலங்கை வரவில்லை என்று அறிவித்துள்ளார். அதாவது, எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்ற விதத்தில்.

இதில், புரியாத விடயம், இனப்பிரச்சினை குறித்து பேச்சு நடத்திக்கொண்டிருக்கும் போதே, சொல்ஹெய்ம் தான் அவ்வாறு செய்யவில்லை என்று, ஏன் பொய் சொல்ல வேண்டும்? அதனால், அவர் ஆற்றும் பெரும் தொண்டுதான் என்ன?

எப்போது சொல்ஹெயம் பெயர், இந்த நாட்டினோடு இணைத்து பேசப்படுகிறதோ, அப்போதே அவர் இனப்பிரச்சினை குறித்த உள்நாட்டு விவாதங்களில் பங்கெடுக்கிறார், அல்லது, அவற்றை அண்மையில் இருந்து கண்காணித்து வருகிறார் என்பதும் கண்கூடு. அதுவும் இல்லையென்றால், மேற்குலகின் பார்வையாளராகவாவது அவர் இங்கே இருக்கிறார் என்று கூட கூறலாம். அவ்வாறு கூறிக் கொண்டால் தவறில்லை.

மாறாக, தனக்கும் பேச்சுவார்த்தைக்கும் சம்பந்தமே இல்லை என்று சொல்ஹெயம் இப்போது கூறிவிட்டு, பின்னர் அவரது பங்களிப்பு இருந்ததாக கருத இடமிருந்தால், தீர்வை எதிர்ப்போரில், ஒரு சாரரோ, அல்லது பல்வேறு தரப்பினரும், அரச தலைமை அல்லது தமிழ் தலைமை, மேலை நாடுகளிடம் சரணடைந்து விட்டது என்று கூறுவர். அதன் காரணமாகவும், தாங்கள் தீர்வு திட்டம் எதனையும் ஆதரிக்கப்போவதில்லை என்றும் அறிவிப்பார்கள். இதுதானே, வழமையான பழக்கம்!

### சிங்களப் பேரினவாதம்

அந்த விதத்தில், சொல்ஹெய்மிற்கு இங்கு என்ன சோலி அல்லது வேலை என்ற கேள்வி எழுகிறது. இரு தரப்பு பேச்சுவார்த்தை அல்லது அனைத்து கட்சி பேச்சுவார்த்தைகளுக்கு இடையே அடிக்கடி தோன்றிக்கொண்டே இருக்கும். சிங்கள பேரினவாத தரப்புகள், இந்த கேள்வியை தங்களுக்குள்ளேயே எழுப்பிக் கொள்வார்கள். அது போன்றே, பொது வெளியிலும் கேள்வி எழுப்புவார்கள்.

இதில், குறிப்பாக ஜே.வி.பியின் நிலையை கருத்தில் கொள்ளவேண்டும். வழக்கம் போலவே, இந்த முறையும் அவர்கள், அனைத்து கட்சி பேச்சுவார்த்தைகளை புறக்கணித்துள்ளார்கள். அறகலயா போரட்டத்திற்கு பின்னர், தென்னிலங்கையில் அந்த கட்சியின் செல்வாக்கு உயர்ந்துள்ளதாக சில கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. அதிலும் குறிப்பாக, கட்சி தலைவர் அனுர குமார திசநாயகே, தென்னிலங்கையில், அந்த மக்களின் அதிக ஆதரவு பெற்ற தலைவர் என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த காலகட்டத்தில், இனப்பிரச்சினைக்கான தீர்வை ஏற்றுக்கொண்டால், எங்கே தனது கூடாரம் மீண்டும் காலியாகி விடுமா, என்ற கவலை ஜே.வி.பிக்கு எழுவது இயற்கையே. அவ்வாறு, ஜே.வி.பி. பங்குபெறாத, அல்லது எதிர்ப்பு தெரிவிக்கும் தீர்வு திட்டத்தால், யாருக்கு என்ன பயன்? எதிர்வரும் மாதங்களில் அல்லது வருடங்களில், ஆட்சி – அரசியலில் ஜே.வி.பியின் கை ஓங்குமென்றால், அவர்கள் தற்போது முன்னெடுக்கப்படும் முடிவுகளை குப்பை தொட்டியில் தானே போடுவார்கள்? அவ்வாறு நடந்தால், அதுவும் வழக்கமான விடயம் தானே?

இது தவிர, அறகலயா போராட்டம் அடையாளம் காட்டிய முன்னிலை சோசலிச கட்சி. நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் இல்லை என்ற காரணத்தினால், அந்த கட்சி, அனைத்து கட்சி கூட்டத்திற்கு அழைக்கப்படவில்லை. ஆனால், அந்த கட்சிக்கு தென்னிலங்கையில் இருக்கும் ஆதரவு குறித்து சரியான அறிவும் புரிதலும் யாருக்கும் இல்லை. இது இப்போது சரியாகப்பட்டாலும், தீர்வு திட்டம் முடிவுறும் தருணத்தில், அதனை எதிர்த்து பிரேமகுமார் குணரத்தினம் வகையாறா, தென்னிலங்கையில் போராட்டம் நடத்தினால், அதன் விளைவு மற்றும் பக்கவிளைவுகள் எத்தகையனவாக இருக்கும் என்று இப்போது, யாராலும் கூற முடியாது. அதுவே உண்மை நிலை.

### அதிக விளம்பரம்

தமிழர் தரப்பிலோ, கூட்டமைப்பிற்கும், அதிலும் குறிப்பாக சுமந்திரனுக்கும் அதிக விளம்பரம், இந்த பேச்சுவார்த்தைகள் மூலம் கிடைக்குமென்றால், அதனை பிற கட்சிகளாலும் அவற்றின் தலைவர்களாலும் ஏற்றுக் கொள்ள முடியாது. அதுவும், சம்பந்தனின் உடல்நிலைமையைக் கருத்தில் கொண்டு, சுமந்திரனை அவரது பேச்சாளராக மட்டும் அரைகுறை மனதுடன் ஏற்றுக்கொண்டிருக்கும் தமிழ் தரப்புகள், இதில் சுமந்திரனுக்கு கிடைக்கும் அதிக விளம்பரத்தை அதீதமாக எதிர்க்கிறார்கள் என்பதே உண்மை.

அதிலும் குறிப்பாக, அண்மையில், இரண்டாவது சுற்று பேச்சுவார்த்தை என்று ரணில் குறுகிய காலத்தில் தலைமையேற்ற நிகழ்வு கேலிப்பொருளாக மாறியது, அவர் செய்தது தவறு என்று வாதிடும் தமிழ் தரப்புகள் உள்ளன. மாறாக, அவர் வேண்டுமென்றே அவ்வாறு செய்து, தமிழர் தரப்பினரிடையே பிளவை ஏற்படுத்தி விட்டார் என்று வாதிடுவோரும் உள்ளனர்.

அதிலும் குறிப்பாக, தன்னை அண்மை காலங்களில் அவசியமில்லாமல் திட்டி தீர்த்தார் என்று கருதப்படும் சுமந்திரனுக்கு, ஜனாதிபதி ரணில் அளிக்கும் முக்கியத்துவம் குறித்து அவர்கள் குழம்பி போயிருக்கிறார்கள். ஏன், ரணில் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுவதை பொதுவெளியில் எதிர்த்த ஒரே தமிழ் தலைவர் சுமந்திரன்தான்.

காரணம், இரண்டாவது சுற்று பேச்சுவார்த்தை, 24 மணிதியால அவகாசத்திலேயே கூட்டப்பட்டது. தங்களது, பிற அலுவல்கள் காரணமாக, சம்பந்தன் மற்றும் சுமந்திரன் தவிர்த்த, ஏனைய தமிழ் தலைவர்கள் இந்த சுற்று பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள முடியவில்லை. இது போதாது என்று, தமிழ் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கும் பணியை, ரணில் சுமந்திரனிடம் ஒப்படைத்தார். அவரும், அனைத்து தமிழ் தலைவர்களுடனும் உடனடியாக தகவலை பகிர்ந்து கொண்டார். அது தானே வினை.

### ஆட்டத்திற்குத் தாளம்

தமிழர் தரப்பு, மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பினுள் இருக்கும் பிளவுகள் குறித்து, ரணில் அறியாதவர் அல்ல. அவர்களுடைய வறட்டு கௌரவமும் அவருக்கு அத்துபடி. அப்படியென்றால், தனது அலுவலகர்களை வைத்துப் பிற தமிழ் அரசியல் தலைவர்களை அழைத்திடாமல், சுமந்திரனிடம் அந்த பொறுப்பை அவர் ஏன் ஒப்படைத்தார்? உண்மையிலேயே. அவருக்கு தற்போதைய களநிலை தெரியாதென்றால், இவர்களை எல்லாம் வைத்து எப்படி அவர் சமாளிக்கப்போகிறார்?

அந்த வகையில், ரணில், சுமந்திரனை அனுசரித்து போவது என்பது, அவருக்கு மேற்குலகின் ஆதரவு இருக்கிறது என்ற எண்ணத்தினால்தான் என்று, கருதுவோர் உள்ளனர். அவ்வாறானால், அந்த ஒரு காரணத்தினால் மட்டுமே, சுமந்திரனை மட்டம் தட்ட உள்நாட்டு சக்திகள் முயலும். இதில், சிங்கள பேரினவாதிகள் மற்றும் தமிழ் தேசியம் மட்டுமே பேசும் தலைவர்கள் அடங்குவர். இதனால், இனப்பிரச்சினைக்கான தீர்வு பின்தள்ளப்படலாம்.

இந்த விடயத்தில், சொல்ஹெய்ம் பெயர் வீணாக அடிபடுவது தவிர்க்க முடியாதது. அவர் உண்மையிலேயே திரைமறைவில் அனுசரணையாளராகவோ, இனப்பிரச்சினை குறித்த ஆலோசகராகவோ இருந்தால், மஹிந்த தலைமையிலான பொதுஜன பெரமுன கட்சி கூட அதனை எதிர்க்கவேண்டிய கட்டாயம் தோன்றலாம். அப்போது, மஹிந்த, தனது கட்சியில் இருக்கும் தென்னிலங்கை பேரினவாதிகள் ஆடும் ஆட்டத்திற்கு தாளம் போடுவது மீண்டும் தவிர்க்க முடியாதது ஆகி விடும்.

### ஏகபிரதிநிதி

அண்மையில் சட்டமாக்கப்பட்ட இருபத்தியோராவது திருத்தத்தின் கீழ் அமைக்கப்பட வேண்டிய அரசமைப்பு பேரவையில் ஐந்தாவது உறுப்பினரை நியமிப்பதில் குழப்பம் நிலவுவதால், அந்த குழுவின் பணிகள் தாமதமாகி வருகின்றன. முன்பு, பதினேழவது சட்ட திருத்தத்தின் கீழ் இந்த பேரவை அமைக்கப்பட்ட போதும், கடைசிவரை இது போன்ற நிலையே நீடித்தது. அதனை காரணம் காட்டியே மஹிந்த அரசு அந்த பேரவையை, பதினெட்டாது திருத்தத்தின் மூலம் காணாமலடித்தார்.

தற்போது, ஆளும் கட்சி மற்றும் அதிகார பூர்வ எதிர்கட்சி என்ற இரண்டும் இல்லாமல், பிறிதொரு நாடாளுமன்ற உறுப்பினரை நியமிப்பதற்கு, கூட்டமைப்பு தனது சார்பில் சித்தார்தனின் பெயரை முன்மொழிந்துள்ளது. பத்து உறுப்பினர்களுடன் நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சி என்ற காரணத்தினால், அந்தப் பதவி தங்களுக்கு தரப்படவேண்டும் என்பது கூட்டமைப்பின் வாதம்.

அதனை எதிர்த்து, பொதுஜன பெரமுன் கூட்டணியில் இருந்து பிரிந்து சென்ற உறுப்பினாகள் தங்கள் சார்பாக, புதிய ஹெல உறுமய கட்சி தலைவர் உதய கம்மன்பில்லவின் பெயரை முன்வைத்தார்கள். இது குறித்து பத்திரிகையாளர்களிடம் பேசிய கம்மன்பில்ல, கூட்டமைப்பு, தமிழர்களின் ஏக பிரதிநிதியல்லர் என்றும், அதனால் மட்டுமே, அவர்கள் முன்மொழிந்த பெயரை எதிர்த்தோம் என்றும் கூறியுள்ளார். தென்னிலங்கை மக்கள் கூட்டமைப்பையும், விடுதலை புலிகள் இயக்கத்தையும் ஒரு சேர பார்க்கவேண்டும் என்பதற்காகவே, அவர் ஏகபிரதிநிதி என்ற வசனத்தை பாவித்தார் எனலாம்.

அரசமைப்பு பேரவை உறுப்பினரான கூட்டமைப்பை சார்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டால், அவர்கள் அந்த அமைப்பை தங்களது அரசியலுக்கும் அதிகார பகிர்வு பிரச்சினையை முன்னெடுக்கவும் தவறாக பயன்படுத்துவார்கள் என்றும் கம்மன்பில்ல கூறியுள்ளார்.

எது எப்படியோ, தமிழர் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகபிரதிநிதி அல்லர் என்பதை ஏற்றுக்கொள்ள தமிழர் தரப்பிலேயே பலரும் காத்துக்கொண்டிருக்கிறார்கள்!

காலைக்கதிர் Kalaikkathir

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

## செவ்வழி நயனம்

# கண்ணனும் கர்ணனும்

மகாபாரதத்தில், கர்ணன் கிருஷ்ணரைக் கேட்டான் :-

என் தாயார் நான் பிறந்த நேரத்தில் என்னை ஆற்றில் விட்டுவிட்டார். முறைதவறிப் பிறந்த குழந்தை என்றார்கள். இது என் தவறா?"

"நான் சத்ரியன் அல்லன் என்று கூறி துரோணாச்சாரியார் எனக்குக் கல்வியைக் கற்றுத்தரவில்லை. இது என் தவறா?"

"பரசுராமர் எனக்கு கற்றுக் கொடுத்தார். ஆனால் சத்ரியன் எனக்கூறி நான் படித்த எல்லாவற்றையும் மறக்க எனக்கு சாபம் கொடுத்தார். இது என் தவறா?"

"ஒரு பசு தற்செயலாக என் அம்பு மூலம் தாக்கப்பட்டது. அதன் உரிமையாளர் என்னுடைய தவறுக்காக என்னை சபித்தார்.

"திரௌபதியின் சுயம்வரத்திலே நான் தேரோட்டியின் மகன் என்பதற்காக நான் அவமானப்படுத்தப்பட்டேன்."

"குந்தி கூட இறுதியாக தன் மற்ற மகன்களைக் காப்பாற்ற மட்டுமே என்னைத் தேடி வந்தார். இப்படி சுற்றி இருப்பவர்கள் அனைவராலும் வஞ்சிக்கப்பட்ட போது துரியோதனனின் அன்பு மூலமாகவே எனக்கு எல்லாம் கிடைத்தது. ஆகையால் அவன் பக்கம் நான் நிற்பது எப்படித் தவறாகும்?" எனக் கேட்டான்.

அதற்கு கிருஷ்ணன் பதில் கூறத் தொடங்கினான்.

கர்ணா நீயாவது பரவாயில்லை. ஆனால், நான் ஒரு சிறையில் பிறந்தேன். என் பிறப்புக்கு முன்பே மரணம் காத்திருந்தது. நான் பிறந்த இரவு அன்றே என் பெற்றோரிடமிருந்து நான் பிரிக்கப்பட்டேன்.

"நீ சிறுவயதிலிருந்து, வாள், இரதங்கள், குதிரைகள், வில், அம்புகள் ஆகியவற்றின் இரைச்சலை நீங்கள் கேள்விப்பட்டிருப்பாய். ஆனால், நானோ மாடு, கொட்டில், சாணம், வைக்கோல் இவைகளுக்கிடையே வளர்ந்தேன். நடக்க ஆரம்பிக்கும் முன்னே என்னைக் கொல்ல பல முயற்சிகள் நடந்தன.

"நல்ல கல்வி இல்லை. இராணுவப் பயிற்சி இல்லை. ஆனால் எல்லோரும் நான்தான் நடக்கும் பிரச்சினைகளுக்கெல்லாம் காரணம் என்கிறார்கள்.

"நீங்கள் ஆசிரியர்களால் மதிக்கப்படுகிறபோது நான் எந்தக் கல்வியையும் பெறவில்லை. நான் 16 வயதில் தான் ரிஷி சாண்திபனியின் குருகுலத்தில் சேர்ந்தேன்!

"நீங்கள் விரும்பிய ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டீர்கள். ஆனால் நானோ நான் விரும்பிய பெண்ணை திருமணம் செய்யாமல், என்னை நேசித்த பெண்களை, மேலும் கொடியவர்களிடம் இருந்து நான் காப்பாற்றிய பெண்களை திருமணம் செய்துகொண்டேன்.

"ஜராசந்த்திடமிருந்து என் மக்களைக் காப்பாற்றுவதற்காக, யமுனா நதிக்கரையிலிருந்து கடலிலிருந்து தூரத்திலிருந்து என்னுடைய முழு சமூகத்தையும் நகர்த்த வேண்டியிருந்தது. நான் ஓடிப்போன ஒரு கோழை!

"துரியோதனன் போரில் வெற்றி பெற்றால், உனக்கு நிறைய பொருள், நாடு, சேனை, கௌரவம் கிடைக்கும். ஆனால் பஞ்சபாண்டவருடன் சேர்ந்து யுத்தம் செய்தால் எனக்கு என்ன கிடைக்கும்?




"கண்ணன்தான் இந்தப் போருக்குக் காரணம் என்ற குற்றச்சாட்டு மட்டுமே மிஞ்சும்.

"கர்ணா ஒன்றை நினைவில் கொள். ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் சவால்கள் உள்ளன.

"வாழ்க்கை எப்போதுமே இலகுவாகவும் எளிதாகவும் இருப்பதில்லை. ஆனால் மனசாட்சிப்படி தர்மத்தின் பால் நிற்பதே சரியானதாகும். எத்தனை முறை நாம் ஏமாற்றப்பட்டோம், எத்தனை முறை நாம் அவமானப் படுத்தப்பட்டோம், எத்தனை முறை வீழ்ச்சி அடைகிறோம் என்பது முக்கியமானது அல்ல. அந்த நேரத்தில் நாம் எப்படி மீண்டு எழுந்தோம் என்பதே முக்கியமானது.

"நம் வாழ்க்கையில் நடக்கும் தவறுகள் நம்மை தவறான பாதையில் போவதற்கான உரிமையைக் கொடுக்கவில்லை

"எப்போதும் நினைவில் கொள். வாழ்க்கை என்பது ஒரு பாதை. சில நேரங்களில் கரடுமுரடாக இருக்கலாம். அதைக் கடப்பது நம் காலணிகளால் அல்ல, நாம் எடுத்து வைக்கும் அடிகள் மூலமே." – என்றான் கண்ணன்.

# தற்றுணிவு



காட்டுப் பாதையால் இளைஞன் ஒருவன் நடந்து போய்க்கொண்டிருந்தான். அவனுக்குப் பசியாக இருந்தது. கொஞ்சம் தொலைதூரம் நடக்க வேண்டும் – அவன் வசிக்கும் கிராமத்தை அடைவதற்கு.

அப்போது பெரிய மாமரம் ஒன்றின் நுனிக்கொப்பிற் பழுத்த மாம்பழங்கள் தொங்கும் ஒரு குலையைக் கண்டான்.

பசிதீர அதனைப் பறித்துண்ண நினைத்தான்.

மரமோ பெரிய மரம். மாம்பழங்களோ உச்சிகொப்பில் வேறு தொங்கிக்கொண்டிருக்கின்றன.

கீழே கிடந்த கற்களால் எறிந்து பார்த்தான். பயனேதுமில்லை. முடிவில் மரத்திலேறிப் பறிப்பதற்குத் தீர்மானித்து நுனிக்கொப்பு வரை சென்றுவிட்டான்.

பழங்களைப் பறிக்கும் அவசரத்தில் சறுக்குண்டு போனான். நல்ல வேளை கீழே விழவில்லை. சிறு கிளை ஒன்றைப் பற்றித் தொங்கிக்கொண்டு "யாராவது என்னைக் காப்பாற்றுங்கள், யாராவது என்னைக் காப்பாற்றுங்கள்"என்று கத்தினான்.

அப்போது அந்த வழியால் வந்த முதியவர் அவனது அவல நிலையைப் பார்த்தார்.

சற்று நேரம் யோசித்தவர் ஒரு முடிவுக்கு வந்தவராய்க் கீழே கிடந்த கற்களைப் பொறுக்கி அவனை நோக்கி எறிந்தார்.

இதைக் கண்டு மரத்திற் தொங்கிக் கொண்டிருந்த இளைஞன் "ஐயா! என்னைக் காப்பாற்றாவிட்டாலும் பரவாயில்லை; கல்லெறிவதை நிறுத்துங்கள்" என்று கத்தினான்.

முதியவர் அதைக் கேட்டபாடில்லை. கற்களை எறிந்துகொண்டிருந்தார்.


கோபம் தலைக்கேறிய இளைஞன் ஒருவாறு சமாளித்துக்கொண்டு கீழிறங்கிவந்து அந்த முதியவரை அடிக்கக் கையோங்கினான்.

அப்போது முதியவர் சிரித்துக் கொண்டு, "கொஞ்சம் பொறு தம்பி, சற்று நேரத்திற்கு முன் 'காப்பாற்று! காப்பாற்று!' என்று கத்தினாய், உன்னைக் காப்பாற்ற வேறு வழி தெரியவில்லை. மனத்துணிவை வரவழைத்து உன்னை நீயே காத்துக்கொள் என்று அப்போது சொன்னால் நீ கேட்கும் மன நிலையிலோ அல்லது அதைச்செயற்படுத்தும்நிலையிலோ இருக்கவில்லை, உன் மனதை மாற்றி அதிலுள்ள பய உணர்வைப் போக்கவே அப்படிச் செய்தேன். இப்போது பார் நீயே உன்னைக் காப்பாற்றியிருக்கிறாய்'' என்று கூறியதும் இளைஞன் தன்னை மன்னிக்கும்படி அம்முதியவரின் காலில் விழுந்து மன்னிப்புக்கோரினான்.

பின்னர் இருவரும் சேர்ந்து கிராமத்தை நோக்கி நடந்தனர்.

மாணவர்களே! நாமும் அவசரப்பட்டு எக்காரியத்திலும் இறங்கக்கூடாது அதே வேளை சிக்கலான வேளைகளில் நாம் எமது தற்துணிவைக் கைவிடவும் கூடாது.

# வாசிப்பு மனிதனை பூரணமாக்கும்



நாம் எமது வாழ்க்கையில் எவற்றையெல்லாம் எடுத்துக்கொள்கின்றோமோ அதே அளவிற்கு வாசிப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். வாசிப்பு என்பது மனித வாழ்க்கைக்கு மிகவும் அவசியமானதொன்றாகும். எமது வாழ்க்கையில் நூல்கள் பல நாம் வாசித்திருப்போம். நாம் எமது ஓய்வு நேரத்தில் நூலகம் சென்று படிப்போமேயானால் அந்த வாசிப்பு எமக்கு பெரிதும் உதவியாக இருக்கும். தற்போது நடைபெற்று வருகின்ற பொருளாதார நெருக்கடி காரணமாக மாணவர்களோ நூலகத்தின் பக்கம் செல்வதே இல்லை. நூலகம் என்பது கடவுள் எமக்கு கொடுத்தத பொக்கிஷம். அதனைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும்.

'நல்ல புத்தகங்களே நல்ல நண்பர்கள்' அதாவது எவ்வளவு நல்ல நண்பர்கள் இருந்தாலும் எப்போதுமே ஒரு புத்தக நண்பனைப் போல் வராது. இது நவீன காலம். இக்காலத்தில் என்ன சந்தேகம் வந்தாலும் வலைத்தளங்களில் தேடி அறிந்து கொள்கிறோம். ஆனால் முற்காலத்தில் புத்தகங்களைத் தேடி வாசித்தே அறிந்து கொண்டோம். அதனால் தான் முற்காலத்தில் வீதிக்கு வீதி வாசிக சாலைகள் காணப்பட்டன.

வாசிப்பதனால் மனிதனுடைய அறிவு விருத்தி அடைகின்றது. பல புத்தகங்கள் வாசித்து மனிதன் மேன்மையடைகின்றான். அறிஞர் ஷேக்ஸ்பியர் அவர்கள் வாசிப்பைப்பற்றிக் கூறுகையில் 'ஒரு பயணத்தின்போது ஒரு பேனா ஒரு புத்தகம் போதுமானது' என்கிறார். அதாவது பயணம் போகும்போது கையோடு புத்தகத்தை எடுத்துச்சென்றால் அந்தப் பயணம் முற்று முழுதாக பயனுள்ளதாக அமையும். 'ஒருவன் தான் கற்ற நூல் அளவே ஆகும் அவனது நல்லறிவு' இது முதுமொழி. கற்றது கையளவு, கல்லாதது உலகளவு இது பழமொழி. நாம் கற்றது கைமண்ணளவு. ஆனால் கற்க வேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன. அவற்றை எல்லாம் கற்க வேண்டுமானால் நூலகம் சென்று நூல்கள் பல வாசிக்க வேண்டும். அவ்வாறு எமது ஓய்வு நேரத்தை புத்தக வாசிப்பிலேயே செலுத்துவோமானால் பூரணமடைந்த ஒரு மனிதனாக ஆகிவிட முடியும். நூல் வாசிப்பிலே பொறுமை என்பது மிகவும் அவசியமானது. தோமஸ் அல்வா எடிசன் 999 முறை தோல்வியடைந்தும் தமது பொறுமையையும் விடாமுயற்சியையும் கைவிடாமையால் உலகம் போற்றும் வெற்றியாளரானார். அதே போன்று நாமும் ஒரு வெற்றியாளனாக வேண்டுமானால் விடாமுயற்சியைக் கைவிடாது பல நூல்களை வாசித்து நாமும் பயனடைந்து கொள்வோம்.

நூலகங்களில் மற்றவர்களுக்கு தொந்தரவு தராது அமைதியாக இருந்து வாசித்துப் பழக வேண்டும். நூலகம் என்பது கடவுள் எமக்குத் தந்த வரங்களுள் முக்கியமான ஒரு பொக்கிஷம். ஆகவே நூலகம் சென்று நன்மை தருகின்ற பல நூல்களை வாசித்து அனைவரும் பயனடைந்து கொள்வோம்.

'நூலகம் என்பது தேன்கூடு
நூல்கள் ஒவ்வொன்றும் தேன் துளிகள்'

- அ.திவ்யா -
(யா/ கொக்குவில் இந்து கல்லூரி)

காலைக்கதிர்
Kalaikkathir

# தற்போது இருக்கின்ற தமிழ்த் தலைவர்களினால் தமிழர்களுக்கான தீர்வைப் பெற்றுத் தர முடியாது

## உண்மையைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்கிறார் வினோ எம்.பி

(வவுனியா செய்தியாளர் கி.வசந்தரூபன்)

தற்போது இருக்கின்ற தமிழ் தலைவர்களால் தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெற்றுத் தர முடியாது. தமிழரசுக் கட்சி தனித்து போட்டியிட விரும்பினால் அவர்கள் போகட்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளில் ஒன்றான ரெலோவின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் சமத்துவ கட்சியின் வன்னிக்கான அலுவலகத் திறப்பு விழாவில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:-

அண்மைக் காலங்களில் நான் சர்ச்சையில் இருந்து கொண்டிருக்கின்றேன். சிலர் ஏற்றுக் கொண்டு சில அறிவுரைகள் கூறுகிறார்கள். ஆனாலும் சிலர் அதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். இந்தக் கூட்டத்திற்கு வருவதற்கு முன்னர் சிந்தித்தேன். வன்னி மாவட்டத்தில் புதிதாக ஒரு கட்சி கால் ஊன்றுகின்றது. நானும் ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவன் என்ற வகையில் எனது கட்சிக்கும் அந்தக் கட்சி ஒரு போட்டியான செயற்பாடு தான். அந்தப் போட்டிக்கு, எங்களுடன் மோதுவதற்கு தயாரான கட்சியின் நிகழ்வில் கலந்து கொண்டு அந்தக் கட்சிக்கு ஆதரவான கருத்தை சொல்லிவிட்டு. போட்டி ஏற்படுகின்ற போது அதன் தாக்கத்தை எப்படி எதிர் கொள்வது என்று சிந்தித்தேன்.

அசோக் தோழர் (சந்திரகுமார்) பல கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருப்பார். ஆனால் இங்கு இரண்டாம், மூன்றாம் கட்ட தலைவர்களே வந்துள்ளார்கள். வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் நான் ஒருவன் மட்டும் இருக்கின்றேன். வடக்கு கட்சி தலைவர்களும் இல்லை.






### ஆயுதமேந்திப் போராடினோம்

ஒரு காலத்தில் நானும் சந்திரகுமார் அவர்களும் தமிழ் மக்களின் விடுதலைக்காக, உரிமைக்காக ஒரே காலத்தில் ஆயுதமேந்திப் போராடியவர்கள். அந்தப் போராட்டத்தின் வலி அல்லது அந்த விடுதலை இலக்கை அடைய முழு மூச்சாக செயற்பட்டவர்கள். நாங்கள் அரசியலுக்கு வருவோம் என்று எந்தச் சந்தர்ப்பத்திலும் நினைத்து பார்க்கவில்லை. ஆனால் எங்களுடைய போராட்டங்களில் கடந்த காலங்களில் இடம் பெற்ற கசப்பான சில நிகழ்வுகளால் நாங்கள் அரசியலுக்குள் நுழைவது, நாடாளுமன்றத்திற்குச் செல்வது தவிர்க்க முடியாததாகிவிட்டது. அது மட்டுமல்ல, என்ன நோக்கத்திற்காக நாங்கள் ஒரு காலத்தில் புறப்பட்டோமோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை. அந்த நேரத்தில் அரசியல் விடுதலையை தனி நாடு என்று எண்ணியிருந்தாலும் கூட, அதற்கு பிற்பாடு தமிழ் மக்களின் விடுதலை, தமிழ் மக்களின் சுதந்திரம், அரசியல் விடுதலை என்பவற்றைப் பெற வேண்டுமாக இருந்தால் நாங்கள் இந்த போராட்ட களத்தை விட்டு விலகிச் செல்ல முடியாத ஒரு சங்கடத்திற்குள்தான் நாம் இருக்கின்றோம்.

இதன் காரணமாகத்தான் சந்திரகுமார் அவர்கள் இந்த கட்சியை பல இடர்பாடுகளுக்கு மத்தியில் உருவாக்கி கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு போட்டியாக சவால் மிக்க ஒரு கட்சியாக வளர்த்துள்ளார். அதனை நான் மறுக்கவில்லை. அரசியல் ரீதியாகவும் போட்டிகள் இருக்க வேண்டும். அதனை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். அந்த போட்டியின் இறுதி இலக்கு மக்களின் விடுதலை என்பதாக இருக்க வேண்டும். ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் தற்போது ஒரு ஐயப்பாடு இருக்கின்றது. தமிழ் மக்கள் மத்தியில் கட்சிகள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன.

தமிழ் தேசியம் என்று பெயரளவில் இயங்கிக் கொண்டிருக்கின்ற சில கட்சிகளுக்குக் கூட தேர்தல் திணைக்களம் இன்னும் அங்கீகாரம் வழங்கவில்லை. அதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம். ஆனால் சமத்துவ கட்சி பதிவு செய்யப்பட்டு விட்டது. அங்கீகாரம் பெற முடியாத நிலையில் நாம் இருக்கின்றோம் என்றால் இவ்வாறு அதிகரித்த கட்சிகள் தேவையா?

### நான் கூட புதிய கட்சியை தொடங்க நினைத்ததுண்டு

ஒரு காலத்தில் நாங்கள் எல்லோரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பாக செயற்பட்டவர்கள். திடீரென ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கட்சி. நான் கூட புதிய கட்சியை தொடங்கினால் எனக்கும் அங்கத்துவம் கிடைக்கும் என நினைத்ததுண்டு. அவ்வாறு தொடங்கினால் பேச்சு வார்த்தையில் தலைவராக நானும் கலந்து கொள்ள முடியும். அப்படிச் செய்வதா? இன்று கூட்டமைப்பில் இருந்து விலகியவர்கள் பல கட்சிகளாக செயற்படுகின்றனர்.

உள்ளூராட்சித் தேர்தல் ஒன்று வரப்போகிறது. மீண்டும் இணைந்து போட்டியிடுவோம் என்று சிலர் எடுகின்ற முயற்சிகளை தடுப்பதற்கு கூட சிலர் இருக்கிறார்கள். தமிழ் தேசியக் கட்சி தலைவர்கள் இணைந்து உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட இணக்கம் என ஒரு பத்திரிகைச் செய்தி வருகிறது. மறுநாள் பேச்சு முறிவு, இன்னுமொரு கட்சி சம்மதிக்கவில்லை என வருகிறது. தமிழர் தரப்பில் தமிழ் தேசியக் கட்சிகள் மத்தியில் இருக்கின்ற ஒரு சாபக்கேடு இதுதான். எங்களுக்குள் ஒற்றுமை இல்லாமையால், அரசியல் கட்சிகள் எல்லாம் தங்கள் தங்கள் சுயலாபங்களுக்காக செயற்படுகிறார்களே தவிர, ஒட்டு மொத்தமாக தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காக செயற்படவில்லை.

சிலர் நினைக்கிறார்கள், எல்லோரும் இணைந்து விட்டார்கள என. ஆனால் நிச்சயமாக நாம் இணையப் போவதில்லை. இதனால் தமிழ் மக்களுக்கான தீர்வை தமிழ் கட்சி தலைவர்கள் ஊடாக எதிர்பார்க்க முடியாது. நாங்கள் இப்போது கூட பிரிந்துதான் நிற்கின்றோம். மாகாணசபைகள் ஊடாக அதிகாரங்களைப் பெற்றுக் கொண்டு, அதில் இருக்கின்ற அதிகாரங்களை அரசாங்கத்திடம் தட்டிப் பறித்துக் கொண்டு, அதைச் செயற்படுத்த வேண்டும் என இங்கே கூறினார்கள். ஆனால் எங்கள் மத்தியில் இருக்கின்ற ஒரு கட்சி இதை வைத்துப் பிரச்சாரம் செய்து கொண்டு, மாகாண சபைக்கு எதிராக எழுச்சி ஊர்வலம் நடத்துகிறார்கள். அப்ப சிங்களத் தரப்பு எங்களுக்கு தீர்வைத் தருமா? மாகாணசபை வேண்டும் என ஒரு சாரார் கேட்கிறார்கள். இன்னுமொரு சாரார் வேண்டாம் என்று தமிழ் மக்களைக் கொண்டு ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் நடத்துகிறார்கள். அப்படி இருக்கையில், நங்கள் எப்படி தீர்வைத் தர முடியும் என அவர்கள் கேட்பார்கள். தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வை வழங்க வேண்டுமென்றால் அதை தடுப்பதற்கு சிங்கள தரப்புக்கள அனைத்தும் ஒன்றுபடும். ஆனால் நாங்கள் ஒன்றுபடப் போவதில்லை. ஒன்றுபட மாட்டோம். இந்த நிலைதான் இருகிறது. சில கட்சிகள் பிரிந்து செல்வதற்கு ஜனநாயக தன்மை கட்சிகளிடையே இல்லாமையே காரணம். உட்கட்சி ஜனநாயகம் இல்லை. உட்கட்சி விமர்சனங்கள் செய்வதற்கு தடுக்கப்படுகிறது.

### கூட்டமைப்பு பலப்படுத்தவே நான் விமர்சிக்கின்றேன்

நான் எனது கட்சிக்குள் இருந்து கூட்டமைப்பை விமர்சிப்பதுண்டு. நான் கூட்டமைப்பு பலப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகவே விமர்சிக்கின்றேன். கூட்டமைப்பு சிதைக்கப்பட வேண்டும் அல்லது இல்லாமல் செய்ய வேண்டும் என்பதற்காக விமர்சிக்கவில்லை.

கூட்டமைப்பை பலவீனப்படுத்த வேண்டும் என நினைக்கும் சிலர் கூட்டமைப்பில் இருக்கிறார்கள். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அனுசரணையுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அப்படி இருக்கக் கூடாது என நினைப்பவர்கள் கூட்டமைப்புக்குள் இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் கூட்டமைப்பு பலவீனப்படுவதை விரும்புவார்கள்.

ஆனால் கூட்டமைப்பு உருவாகின்ற போது நாம் அதற்குள் இருந்தோம். உருவாக்கத்திற்கு நாங்களும் ஒரு காரணம். தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) அப்போது இருந்து இருந்த கட்சி. நான்கு கட்சிகள் அப்போது இருந்தன. இப்பொழுது தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) மட்டும் தான் இருக்கின்றோம். ஆனந்தசங்கரியின் தமிழர் விடுதலைக் கூட்டணி, சுரேஷ் பிறேமச்சந்திரனின் ஈ.பி.ஆர்.எல்.எவ்., கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் இப்போது இல்லை. நாங்கள் மட்டுமே உள்ளோம். கூட்டமைப்பு என்ன நோக்கத்திற்காக உருவாக்கப்பட் டதோ, அந்த இலக்கை அடையும் வரை கூட்ட மைப்பை எந்தக் காரணம் கொண்டும் அழித்து விட முடியாது. அதற்கு துணைபோக முடியாது. தமிழீழ விடுதலை இயக்கம் அந்த விடயத்தில் உறுதியாக இருந்து செயற்படுகிறது.

### தமிழரசு விரும்பினால் தனிவழி போகட்டும்

ஆனால், கூட்டமைப்பை விமர்சிக்க எங்களுக்கு உரிமை இருக்கிறது. அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்கவே கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. நாங்கள் தீர்வை இதுவரை எட்டவில்லை. நாங்கள் கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டும். ஆனால் சிலர் பிளவுபடுத்த முயல்கிறார்கள். இனிவரும் தேர்தலில் தாங்கள் தனித்து போட்டியிட விரும்புவதாக சிலர் சொல்கிறார்கள். தமிழரசுக் கட்சியின் பெரும்பான்மையானவர்கள் தனித்து போட்டியிட விரும்புகிறார்கள் என கூறுகிறார்கள். அவர்கள் விரும்பினால் போகட்டும். அவர்களுக்கு அக்கறையில்லை. அக்கறை இருந்தால் கூட்டமைப்பாக செயற்பட வேண்டும்.

போராட்ட காலத்தில் கூட பல இயக்கங்கள் இருந்தன. அதனால் பல கட்சிகள் உருவாகுவது புதிய விடயமல்ல. தற்போது கட்சிகள் கூடிவிட்டன. சில கட்சிகளில் பெயருக்கு ஜனநாயகம் இருக்கும். ஆனால் செயற்பாடு ரீதியாக அங்கு ஜனநாயகம் இருக்காது. இலங்கை தமிழரசுக் கட்சிக்குள் ஜனநாயகம் இல்லை என்று சொல்லி ஜனநாயக தமிழரசுக் கட்சி என்று ஒரு கட்சி உருவானது. அது இன்று காணாமல் போய்விட்டது. சிவகரன், போராசியர் சிற்றம்பலம் போன்றவர்கள் அதை உருவாக்கினார்கள். அனந்தி, ஐங்கரநேசன் பிரிந்து தனித்தனித் கட்சிகளை வைத்துள்ளார்கள். இது எல்லாம் சாபக்கேடு. தமிழ் தலைவர்கள் தீர்வைப் பெற்று தருவர்கள் என தமிழ் மக்கள் நினைக்கிறார்கள். ஆனால் ஒரு போதும் இல்லை. இப்பொழுது இருக்கும் தமிழ் தலைவர்களால் தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுத்தர முடியாது. இப்போது இருக்கிற சிங்கள தலைவர்களாலும் பேச்சின் மூலம் தீர்வைத் தர முடியாது.

### கபடத் தனத்தோடு தான் ரணில் இன்று பேசுகின்றார்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று பேசுகின்றார். கபடத் தனத்தோடு தான் பேசுகின்றார். பேச்சு வார்த்தை நடந்தது. அடுத்த பேச்சுக்கு திகதி தீர்மானிக்கப்பட்டது. ஆனால் தமிழர் தரப்பில் இருந்து ஒரு கட்சியை வலிந்து இழுத்து தனித்து பேசுகிறார்கள். தமிழர் தரப்பாக ஒரு தரப்பாக நின்று அரசாங்கத்துடன் பேச வேண்டும். அந்தப் பேச்சுத் தான் வெற்றியளிக்கும். பல தரப்புகளாக சென்றால் தீர்வைப் பெற முடியாது. கட்சிகள் பிரிவது தமிழ் மக்களுக்கான சாபக்கேடு. சமத்துவக் கட்சியை கூட தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் ஏன் இணைந்து செயற்படக் கூடாது என கேட்கின்றேன். அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக நீக்கள் கூட்டமைப்பிலும் அங்கத்துவம் பெற முடியும். ஒற்றுமையைத்தான் தமிழ் மக்கள் விரும்புகிறார்கள். ஒற்றுமைப்பட்டால் காலம் தாழ்த்தி என்றாலும் தீர்வைப் பெற முடியும்.

மக்களது பிரச்சினைகளை எங்களால் தீர்க்க முடியாது இருக்கின்றது. ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக இதற்கு நான் வெட்கப்படுகிறேன். பொருளாதார நெருக்கடிக்கு கூட ஒன்றும் செய்ய முடியாத நிலை இருக்கிறது. நாங்கள் எதிர்கட்சியாக இருந்து அரசை விமர்சித்ததன் காரணமாக மக்களுக்கு ஒன்றும் செய்யவில்லை. ஆனால் நாங்கள் துரோகம் செய்யவில்லை. – எனத் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -


அங்கம் - 227

மனதுக்கு ஒன்று சரியென பட்டால் அது சரியாகவே ஆகிவிடுகின்றது. ஒன்று மோசம் என்று நினைத்தால் மோசமாகவே தென்படும். ஆனால் காலக்கிரமங்களிலும், அனுபவங்களிலும் மனது தனது எண்ணங்களை மாற்றிக் கொள்கிறது. ஆனால் சிலர் எவ்வளவு படித்தாலும், அனுபவங்களில் அறிந்தாலும், தங்களது மனதில் இருப்பவற்றை மாற்றிக் கொள்வதில்லை. சிங்கள – பௌத்தத்தின் பேரினவாதப் பேராண்மைப் பகுதிகள் இதற்குச் சான்று. அதுபோலவே, தமிழ் மக்களிடையே உறைந்திருக்கும் தீவிரவாதமும். இரண்டுக்குமே நியாயங்கள் உண்டு. ஆனால் அவை வரம்பை மீறும் போது எல்லை கடந்த துன்பங்களைத் தருகின்றன.



ராஜீவ்

'காடும் கடலும்' என்ற நாடகத்தில் முள்ளிவாய்க்கால் கோவிலின் அருகே வசித்த குறி சொல்லும் பெண் சிங்கள இராணுவத்தினர், அரசின் அதிகாரிகளுக்கு எதிராக 'அறம் பாடியதை' குறித்து இருந்தேன். 35 ஆண்டுகளுக்கு பின்னர் காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் தமிழ் மக்கள் நீதியாக நடத்தப்படவில்லை என சர்வதேசங்களுக்கு அறிவித்து, அந்த திடலிலேயே 'முள்ளிவாய்க்கால் கஞ்சி' தந்த பின்னும், அவற்றுக்கெல்லாம் ஆதரவு தந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ என்ன சொல்கிறார்? தமிழ் மக்களுக்கான தீர்வு 13ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில்தான் என்பது அவரது நிலைப்பாடு. தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் ஏதுமில்லை, அவர்களுக்கு இருப்பது பயங்கரவாதப் பிரச்சினைதான் என கூறி, போரை நடத்திய மஹிந்தவோ '13 பிளஸ்' என அறிவிக்கிறார். இவை எல்லாவற்றையும் அறிந்தவர், நோர்வே சமாதானப் பேச்சு வார்த்தைகளில் சமஷ்டிக் கட்டமைப்பை ஆராய விழைந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க. தமிழ் மக்களுக்குத் தரப்படும் தீர்வு, அவர்களின் உரிமைகளின் அடிப்படையில், அறம், தர்மம் சார்ந்து அமைய வேண்டும் என எந்தவித நோக்கமும் அவர் தரவில்லை.



ஜே.ஆர்.

**சுதந்திர தினத்தை அண்டி 13 ஆம் திருத்தச் சட்டத்தை மாகாண முதல்வரின் அதிகாரங்களோடு அமல்படுத்துவதுதான் என்று கூறினால் இவர்கள் யாவரும் மீதும் தமிழ் மக்கள் 'அறம் பாடுவதா'? அல்லது அதனை அப்படியே ஏற்றுக் கொள்ள இணங்கும் தமிழ் தலைமைகள் மீது 'அறம் பாடுவதா'?**

நடந்த அணுகுமுறைகளின் நியாய, அநியாயங்களில் ஆராய்வில் வழிகள் தேட இன்றைய யதார்த்த நிலையில் அந்தச் சூழ்நிலைகள் இல்லை.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் சீனா தன் தடங்களைப் பதிக்க ஏற்படுத்தும் முயற்சிகளிலும், பாகிஸ்தான் விடுதலைப் புலிகளின் மீள் வரவுக்கு வழிகள் வகுக்கின்றது என்று இந்தியா தரும் செய்திகளிலும் புவிசார் அரசியலில் இந்து மகா சமுத்திரத்தை அடுத்து நிகழ்ச்சி நிரல்கள் மாறலாம்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் ஆறு போல எவ்வளவு வளைந்து, உருண்டு, புரண்டு, பிரவகித்து ஓடுகிறது. ஆயினும் அது சமுத்திரத்தை வந்தடைய வேண்டும். அது நியதி. அந்த ஆற்றின் மூலமே இந்தியா தான். ஜே.ஆர். ஒப்பந்தத்தை ஆக்குவதற்கு முன், அமெரிக்காவிடம் ஆயுத உதவி கேட்டுப் போனபோது, ஜனாதிபதி ரீகன் அவருக்கு சாட்சிக்காரனுடன் (தமிழருடன்) மோதுவதை விட்டு, சண்டைக்காரனுடன் (இந்தியாவுடன்) சமாதானத்தை ஏற்படுத்துங்கள் என்று புத்தி கூறி அனுப்பினார்.

பின் ஜனாதிபதி மஹிந்த இந்தியாவின் போரையே நான் முடித்தேன் எனப் பெருமை பேசினார்.

ஆக, இயற்கையின் விதிகளில் சமுத்திரத்திலிருந்து நீர் ஆவியாக மேல் எழுந்து, மேகமாகி, மழை பொழிந்து, ஆறாக வேண்டும். அதனைத் தமிழ் மக்கள் தங்களுக்குப் பிரயோசனமாக மடைகள் கட்ட வேண்டும்.

ஆகவே பேசப்பட்டவற்றில் பலவற்றைத் தவிர்த்து, அரசியலுக்காகவே இயக்கப்படும் சிலவற்றைப் பற்றிய கருத்துக்களை பகிர்கிறேன்.

**13ஆம் திருத்தம் தமிழர் தாயகங்களை ஏற்றுக் கொள்கின்றதா?**

இந்தத் திருத்தம் வெளிப்படையாக இதை தெரிவிக்கவில்லை என்பதால் ஒப்பந்தத்தில் இருந்தவையே கொச்சைப் படுத்தப்பட்டன. சிங்கள தரப்புக்கள் தங்களுக்கான அரசமைப்பு யாப்புகளை 1972 இல் 1978 இலும் ஆக்கிக் கொள்ளும் போது, வடக்கிலும், கிழக்கிலும் தமிழ் மொழியின் பாவிப்புக்கான கருத்துக்களை உள்ளடக்கி இருந்தனர். கொல்வின் ஆர் டி சில்வா 1972 ஆம் ஆண்டு அரசமைப்பை யாக்கும்போது, வடக்கு, கிழக்கில் தமிழ் மொழிப் பாவனைக்கு ஏற்படுத்தப்பட்ட கருத்துக்களுக்கு மேலும் போய், அதுவரை தமிழ் மொழி பாவிப்பு சம்பந்தமாக இயற்றப்பட்ட சட்டமூலங்கள் யாவற்றையுமே யாப்பினது அங்கமாக இணைத்தார். ஆனால் தமிழ் மொழி பாவிப்பு எண்ணியபடி அமலாக்கப்பட்டதா என்பது வேறு அரசியல்.

அப்படியாக வடக்கு, கிழக்கு தமிழர் பிரதேசம் என ஏற்றுக்கொள்ளப்பட்டது பின்நாஅல்களில் பல சர்வதேச புத்திஜீவிகளால் "தமிழ் மக்கள் தனித்துவமான மொழி, கலாச்சாரங்கள் அதேசமயம் அடையாளப்பட்ட பிரதேசங்களுக்குள் வாழ்கிறார்கள்" என உறுதிப்படுத்துகிறது என்று கேட்டுக் கொண்டார்கள். ஆகவேதான் எந்தவித சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்படாமல், அதற்கான தேவையுண்டு என்று கூட கணக்கெடுக்காமல், ஒப்பந்தத்தில் "வடக்கும் கிழக்கும் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள்" என இந்தியாவாலும் ஸ்ரீலங்காவாலும் இணைந்து ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்தப் பிரதேசங்கள் அவர்களுக்கு பாரம்பரியமானவை என்பதால் அங்கே அவர்கள் தனித்துவமான மக்களாக மொழியால், கலாசாரத்தால், மதங்களால் இணைந்து ஒரு தேசமாக வாழ்ந்தமை என்பதை அங்கீகரித்தது. அந்த அடிப்படைதான் ஒப்பந்தத்தின் கணக்கு. அதைப்பற்றி தங்களது வகிபாகங்களுக்காக பல கணக்குப்பிள்ளைகள் தம் இஷ்டப்படி பேசினார்கள் – ஜே.ஆர். உட்பட.



தேவநாயகம்

**வடக்கு, கிழக்கின் நிரந்தர இணைப்புக்கு, கிழக்கு மாகாணத்தில் சர்வஜன வாக்கெடுப்பு ஏன்?**

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் போன்ற பலர் (கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும் அதனை அறிந்திருப்பார்) அப்படியான ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறப் போவதில்லை எனவும், அதற்கான உத்தரவாதம் தனக்கு ஜே.ஆரினால் தரப்பட்டதாக ரஜீவ் காந்தி கூறினார் எனத் தெரிவித்திருந்தனர். அந்தச் சரத்து, ஒப்பந்தத்தைச் சிங்கள மக்களிடையே பிரசாரப்படுத்தி, ஏற்றுக் கொள்ள வைப்பதற்கான காலத்தைப் பெற்றுத் தரும் என ஜே.ஆர். கேட்டுக் கொண்டமையால் அது இணைக்கப்பட்டிருந்தது என்றும் விளக்கம் தரப்பட்டது.

அந்த விளக்கங்களிலும் நம்பிக்கையிலும் இந்தியா இணங்கி இருந்தாலும், ஜே.ஆர். நரித்தந்திரங்களில், அவர் கிழக்குப் பகுதியில் இன விகிதாசாரத்தை கணக்கெடுத்து, அப்படியான சர்வஜன வாக்கெடுப்பு கிழக்கில் நடத்தப்பட்டால் அங்குள்ள 33 வீத முஸ்லீம் மக்களும் 27 வீத சிங்கள மக்களும், 40 வீத தமிழ் மக்களில் ஓரளவினரும் அதனை எதிர்ப்பார்கள், அப்படி எதிர்த்தால் அது (இணைப்பு) நடவாது எனத் தனது கட்சியின் நம்பிக்கை ஆள்களுக்குத் தெரிவித்தார். ஆனால் அவர்களுக்கு ஜே.ஆர். தாம் ராஜீவ் காந்திக்குக் கொடுத்த உத்தரவாதங்களைப் பற்றிக் கூறவில்லை. பாரம்பரிய பிரதேச வாதத்தை மடக்கத் துணை போனவர்கள் கே.டபிள்யூ. தேவநாயகமும், அப்துல் மஜீத்தும். இவர்கள் இருவரும் ஜே.ஆரின் மந்திரி சபையில் அங்கத்துவம் வகித்தவர்கள்.

தமிழ்நாட்டில் 05 ஆகஸ்ட் 1988 இல் தாம் பேசிய ஒரு பொதுக்கூட்டத்தில் ரஜீவ் காந்தி "விடுதலைப் புலிகள் தங்களது நேர்மையை வெளிப்படுத்தினால்தான் போர் நிறுத்தத்துக்கான பேச்சுவார்த்தை ஒன்றைக் கூட சிந்திக்க முடியும். இந்த நேரம் அரசியலும் ஒழுக்கமும் கலந்த தைரியங்களை, தோட்டாக்களையும் குண்டுகளையும் விட்டு வெளிப்படுத்த வேண்டிய தருணம். விடுதலை புலிகள் தேர்தலை ஒழுக்கமும் அரசியலும் கலந்த தைரியத்துடன் எதிர் கொள்ள வேண்டும்." – எனக் கூறினார்.



அப்துல் மஜீத்

விடுதலைப் புலிகள் அதனை ஏற்று தேர்தலை அணுகியிருந்தால் இணைப்புக்கான சர்வஜன வாக்குரிமை நடந்திருக்குமா? அரசியல் எந்தப் பாதையில் வளர்ந்திருக்கும்? என்பவை சிந்திக்கப்பட வேண்டும்.

(வளரும்...)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

## 24 லட்சத்திற்கும் ...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் மக்கள் தொகையில் 26 வீதத்தினர், அதாவது 57 இலட்சம் பேருக்கு மனிதாபிமான உதவி தேவைப் படுவதாகவும் அந்த அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

அதேபோல், இந்த நாட்டில் 5 மில் லியனுக்கும் அதிகமான மக்கள் உணவுப் பற்றாக்குறையால் அவதிப்படுகின்றபர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது..

மேலும், இந்த நெருக்கடி 3.45 மில் லியனுக்கும் அதிகமான விவசாய மக் களையும், 2.43 மில்லியனுக்கும் அதிக மான ஊட்டச்சத்து தேவையுள்ள மக்க ளையும், அத்தியாவசிய மருந்துகள் தேவைப்படும் கிட்டத்தட்ட 2 மில்லியன் மக்களையும் கடுமையாக பாதித்துள்ளது எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது.

## பேரா பல்கலை மாணவர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமோத் சத்சர நேற்றுத் தெரிவித்திருந் தார்.

நேற்றுப் பல்கலைக்கழகத்திற்கு முன் பாக ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து அவர் இதனைத் தெரிவித் திருந்தார்.

சம்பவம் தொடர்பில் ஊடகங்கள் மேற் கொண்டவிசாரணையில்குற்றப்புலனாய் வுத் திணைக்களத்தினால் அவர் கைது செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதன்படி, சந்தேகநபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆலையடிவேம்பில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அக்குடும்பம்பயன்படுத்தியுள்ளது. இதனை அவதானித்துள்ள அந்தச் சிறுவனும் அக் குழியில் யாரும் அவதானிக்க நேரத்தில் நீரை அள்ள முயற்சித்துள்ளான் எனவும் இதன் காரணமாகவே அச்சிறுவன் குழி யில் வீழ்ந்துள்ளான் எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

சிறுவனைக் காணவில்லை எனத் தேடிய தாய் உள்ளிட்ட உறவினர்கள் இறுதியில் குழியில் அவதானித்தபோதே அங்கிருந்து சிறுவன் மீட்கப்பட்டு வைத் தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டுள் ளான். ஆயினும் அச்சிறுவனின் உயிர் பிரிந்துள்ளது.

இதேநேரம் அச்சிறுவனின் தாய்க்கு இரண்டாவது பிள்ளை பிறந்து ஒரு வார மாகிய நிலையில் இச்சம்பவம் நடைபெற் றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மரணமடைந்த சிறுவனின் உடல் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை யின் பிரேத அறையில் உடற்கூற்றாய் விற்காக வைக்கப்பட்டுள்ளது.

## தேர்தலை நடத்துவதாகக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கூட்டணியாகப் போட்டியிடத் தீர்மானித்துள்ளோம். அனைத்து அரசி யல் கட்சிகளும் கூட்டணி அடிப்படையில் போட்டியிட பேச்சுகளை முன்னெடுத்துள் ளன. எந்தக் கட்சியும் இனித் தனித்துப் போட்டியிட்டு வெற்றி பெற முடியாது.

2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் திகதிக்கு முன் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தேசிய தேர்தல் கள் ஆணைக்குழு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இருப்பினும் தேர்தலை பிற்போட அர சாங்கம் பல முயற்சிகளை மேற்கொண் டுள்ளது. தேர்தலுக்கு நாங்கள் தயார் எனப் பொது இடங்களில் குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கம் திரைமறைவில் தேர்தலை பிற்போட முயற்சிக்கிறது.

தேர்தலை நடத்த நிதி இல்லை என அரசாங்கம் குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. தேர்தலை நடத்த அர சாங்கம் தயாரில்லை. மக்களாணைக்கு செல்வதை தடுப்பதற்காக தேர்தலை பிற்போடமுயற்சிப்பதையிட்டுஅரசாங்கம் வெட்கமடைய வேண்டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற் போட்டால் ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளை யும் ஒன்றிணைத்து அரசாங்கத்திற்கு எதிராக மாபெரும் போராட்டத்தில் ஈடுபடு வோம்.

மக்கள் ஆதரவு உள்ளது என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தல் ஊடாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண் டும். - என்றார்.

## சஜித் கட்சியின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து நேற்று இந்த நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது

ஐக்கிய மக்கள் சக்தியின் உதவி செயலாளர்களில் ஒருவராகவும், ஐக்கிய மகளிர் சக்தியின் பிரதித் தலைவராகவும், எதிர்க்கட்சித் தலைவரின் ஒருங்கிணைப் புச்செயலாளராகவும் இவர் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## திருடர்களை வைத்தே ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெருக்கடிகளை நிவர்த்தி செய்ய முடியா தென நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர் -

"இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அரசாங்கத்திடம் எந்த வொரு திட்டமும் இல்லை. நாட்டின் பொரு ளாதார சூழ்நிலையை அரசாங்கம் இது வரை புரிந்துகொள்ளவில்லை.

இலங்கையில் உள்ள சிறு மற்றும் நடுத்தர வியாபாரிகள் நாட்டின் பொருளா தாரத்தில் முக்கிய பங்கு வகிக்கிறாரகள். இவ்வாறானவர்களுக்கு உதவி செய்யா மல் நாட்டின் பொருளாதாரத்தை ஒருபோ தும் கட்டியெழுப்ப முடியாது.

இலங்கையின் பொருளாதார நிலை குறித்த போதுமான அறிவு அரசாங்கத்தில் உள்ளவர்களுக்கு இல்லை.

சர்வதேச உதவிகளுக்கு தம்மை கட் டுப்படுத்திக் கொள்ளாமல், அரசாங்கம் நாட்டு வருமானத்தை அதிகரித்துக் கொள் ளத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

விவசாயிகள், வியாபாரிகள் உள்ளிட்ட தரப்பினருக்கு உதவ அரசாங்கம் இது வரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க வில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி தாமதப்படுவதுக்கு மக்கள் ஆணையில் லாத அரசாங்கமே காரணம் - என்றார்.

## சீன நன்கொடை அரிசி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீன அரசின் நிவாரண அரிசி தொடர்பாக சமூக வலைத்தளங்களில் எழுப்பப்படும் விமர்சனங்கள் தொடர்பாக இலங்கைக் கானசீனபிரதித்தூதுவரிடம்ஊடகவியலா ளர்கள் கேள்வியெழுப்பிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்த பதிலில், சீன நாட்டினால் வழங் கப்பட்ட அரிசி தொடர்பில் ஒரு சிலரால் வதந்தி மற்றும் பொய்யான தகவல்கள் பரப்பப்படுகின்றன. இது தொடர்பில் ஊட கங்கள் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண் டும்.

நான் உட்பட சீன மக்கள் உணவுக்கு பயன்படுத்தும் அரிசியையே இங்கு வழங்கினோம். அந்த அரிசியை ஸ்ரிக்கி றைஸ் (sticky rice) என்று சொல்வார்கள். அதனை சமைப்பதற்கான வழி முறை என்பது சற்று வித்தியாசமானது என்றார்.

## கடலட்டை பதனிடும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்ரநஷனல் நிறுவனத்தின் கடலட்டை பதனிடும் தொழிற்சாலையை கடற்றொ ழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற் றும் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த ஆகியோரால் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளம் தொழிலதிபர் சுகந்தசீலன் அரவிந்தனின் முயற்சியினால் உருவாக்கப்பட்டுள்ள இந்த நிறுவனத்தின்மூலம்நூற்றுக்கணக் கானோர் வேலைவாய்ப்பினை பெற்றுக் கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் யாழ் மாவட்ட கடற் றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்க ளின் சம்மேளனத்தின் பிரதிநிதிகள், கடற் றொழில் திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், கடற்படையினர் கலந்து கொண்டனர்.






# உயர்நீதிமன்றுக்கு வழங்கிய வாக்குறுதியை தேர்தல்கள் ஆணைக்குழு பாதுகாக்கும்!

## நம்புகின்றோம் என்கிறார் கம்மன்பில



தேர்தல் சட்டத்தின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதாக உயர்நீதிமன்றத்துக்கு வழங்கிய வாக்குறுதியை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு பாதுகாக்கும் என நம்புகிறோம்.

ஜனவரி மாதம் 4 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியாகுமாயின் பெப்ரவரி 25 முதல் மார்ச் 11 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என பிவிதுறு ஹெல உறுமய அமைப்பின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுறு ஹெல உறுமய அமைப்பின் காரியாலத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பான அறிவிப்பை இம்மாத இறுதியில் வெளியிடுவதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த 8 ஆம் திகதி குறிப்பிட்டது,ஆனால் இதுவரை எவ்வித அறிவிப்பும் விடுக்கப்படவில்லை. ஆனால், ஜனவரி மாதம் 04 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியாகும் என ஆளும் தரப்பினர் குறிப்பிட்டுள்ளார்கள்.

தேர்தல் சட்டத்தின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு உயர்நீதிமன்றத்துக்கு வாக்குறுதி வழங்கியது, இந்த வாக்குறுதியை ஆணைக்குழு பாதுகாக்கும் என எதிர்பார்க்கிறோம். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட இரு ரிட் மனுக்கல் எதிர்வரும் மாதம் 18 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேசிய தேர்தல்கள் ஆணைக் குழு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான அறிவிப்பை எதிர்வரும் மாதம் (ஜனவரி) 09 ஆம் திகதிக்குள் அறிவிக்க வேண்டும்.தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டு 14 அல்லது 17 நாள்களுக்குள் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

வேட்பு மனுக்கல் தாக்கல் செய்யப்பட்டு 5 முதல் 7 வார காலத்துக்குள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

எதிர்வரும் மாதம் 04 ஆம் திகதி உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டால் 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 11 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் நடத்தப்பட வேண்டும்.

தேர்தலை பிற்போட அரசாங்கம் பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டுள்ளது. உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நிச்சயம் நடத்தப்பட வேண்டும். தேர்தலை பிற்போட வேண்டிய தேவை ஏதும் தற்போது கிடையாது. – என்றார்.

# தேர்தலுக்குப் பணம் செலவழித்தால் மீண்டும் பொருளாதாரம் மண்கௌவும்!

## நிதி அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் எச்சரிக்கை

அரச ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம் மற்றும் கொடுப்பனவுகளை மட்டுமே அரசாங்கத்தால் வழங்கக்கூடியதாக இருப்பதாக நிதி அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த சூழலில் தேர்தல் நடத்தப்பட்டால் பொருளாதார நெருக்கடி மோசமடைந்து நாடு மீள முடியாத நிலைக்குத் தள்ளப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். தற்போதைய நிதி நெருக்கடியைத் தீர்க்க முறையாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில் அதன் பெறுபேறுகளை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் பெறமுடியும் எனத் தெரிவித்துள்ளார். இவ்வாறானதொரு பின்னணியில் தேர்தலுக்குப் பணம் ஒதுக்க முடியாது, பணம் ஒதுக்க வேண்டுமானால் கடந்த 06 மாதங்களில் பொருளாதாரத்தை மீட்பதற்கான வேலைத்திட்டம் அழிந்து நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படும் என்றும் கூறியுள்ளார்.

# அம்பேவெல பண்ணைக்கு 30 ஏக்கர் காணி வழங்குக!

## ஜனாதிபதி ரணில் பணிப்பு



அம்பேவெல பண்ணைக்கு அருகில் கைவிடப்பட்ட 30 ஏக்கர் காணியை உடனடியாக பண்ணைக்கு வழங்குமாறு நுவரெலியா மாவட்ட செயலாளர் மற்றும் மாநகர ஆணையாளருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

மேற்படி காணியை மேய்ச்சல் நிலமாக அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து கறவை மாடுகளின் உணவுத் தேவையை பூர்த்தி செய்ய பயன்படுத்துமாறு ஜனாதிபதி விடுத்துள்ள பணிப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அம்பேவெல பண்ணைக்கு விஜயம் செய்த பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த பணிப்புரையை வழங்கியுள்ளார்.

# ஜனாதிபதி தேர்தலில் சஜித் போட்டியிடார்!

## பாலித்த ரங்கே பண்டார சவால்



நாட்டு மக்களுக்கும் ஜனாதிபதிக்கும் சிறந்த நாட்டை உருவாக்கும் எதிர்பார்ப்புடன் ஆசிவேண்டி பொலன்னறுவை சோமாவதி விகாரை வளாகத்தில் ஆசீர்வாத பிரார்த்தனை நிகழ்வொன்றை நாளை (சனிக்கிழமை) நடத்த தீர்மானித்துள்ளோம்.

இதன்போது ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு கிடைக்கும் முதலாவது சந்தர்ப்பத்திலேயே தேர்தலை நடத்த வழி ஏற்படவேண்டும் என பிரார்த்திக்க இருக்கின்றோம் என ஐக்கிய தேசிய கட்சியின் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

அரசமைப்புக்கு அமைய ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு கிடைக்கும் முதலாவது சந்தர்ப்பத்திலேயே ஜனாதிபதி தேர்தலை நடத்துவதுதான் பொருத்தம். அதனால் நாட்டு மக்களுக்கும் ஜனாதிபதிக்கும் ஆசிவேண்டி நடத்தும் பிரார்த்தனை நிகழ்வின்போது ஜனாதிபதி தேர்தலை நடத்த வழி ஏற்படவேண்டும் எனப் பிரார்த்திக்க இருக்கின்றோம். நாட்டில் எந்த சபைகள் இருந்தாலும் பயனில்லை. மாகாணசபைகள் மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் நீண்டகாலமாக செயற்பட்டு வருகின்றன. என்றாலும் நாட்டு மக்களுக்கு அது விளங்கியதா? அவை இருந்தாலும் பாரிய வேலைத்திட்டங்கள் எதுவும் இடம்பெறவும் இல்லை.

நாட்டின் தற்போதைய நிலையில் நாடாளுமன்றத்தில் இருக்கும் 225 பேரின் பொறுப்புக்கள் என்ன? நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு நாட்டின் பொருளாதாரத்தை முன்னுக்கு கொண்டுசெல்வதாகும். உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதா இல்லையா என்பதை தேர்தல் ஆணையாளர் மற்றும் அரசாங்கம் தீர்மானிக்க வேண்டும். மேலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பஸ் ஓட்டாததால் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதிக்கு சவால் இல்லை. சஜித் பிரேமதாஸவின் நடவடிக்கைகளில் நாங்கள் பெருமளவு கரிசனை கொள்ளமாட்டோம். நிவாரணம் வழங்கி இந்த நாட்டை முன்னேற்ற முடியாது. அதேபோன்று சஜித் பிரேமதாஸ ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வரப்போவதில்லை. அவர் எந்த தேர்தலுக்கும் முன்வந்ததில்லை.

அவர் கட்சியின் தலைமைத்துவ பிரச்சினையின் போது, அதில் தீர்மானம் மிக்க தரப்பை பிரநிதிநிதித்துவப்படுத்தி, பின்னர் வாக்களிப்பு தினத்தில் கரு ஜயசூரியவை அதற்கு நியமித்து, ரவி கருணாநாயக்கவுடன் சேர்ந்து பிரதி தலைவர் பதவிக்கு சென்றால் தனக்கு வெற்றிபெறலாம் என, தனக்கு வெற்றிபெற முடியுமான பதவிக்காக முன்வந்தார். இறுதியில் எந்த ளவு நல்லவராக இருந்தபோதும் கருஜயசூரிய தோல்வியடைந்தார்.

அதேபோன்று நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி தெரிவுக்கு வாக்களிப்பு நடத்த வேண்டும் என தொடர்ந்து குரல்கொடுத்துவந்த அவர், இறுதி நேரத்தில் டலஸ் அழகப்பெருமவை முன்னுக்கு அனுப்பி அவர் ஒதுங்கிக்கொண்டார். அதனால் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலிலும் இதுதான் நடக்கப்போகின்றது. சஜித் போட்டியிட மாட்டார் என்பதை குறித்து வைத்துக் கொள்ளுங்கள். – என்றார்.

# அரசாங்கத்தின் பங்காளியாக ஜே.வி.பி. கட்சியும் ஈடுபாடு!

## என்கிறார் சமிந்த விஜேசிறி



அரசாங்கத்துக்கு எதிராகவும் ராஜபக்ஷக்களுக்கு எதிராகவும் இன்று கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டிருக்கும் ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, அன்று மஹிந்த ராஜபக்ஷ வெற்றிபெற முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கியவராவார். இன்றும் அவர் அதனையே செய்து கொண்டிருக்கின்றார் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

மின் கட்டணத்தை அதிகரிப்பதால் பணவீக்கம் குறைவடையுமே தவிர, மின் உற்பத்திப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கான டொலர் கிடைக்கப் பெறாது. தமது சகாக்களைப் பாதுகாப்பதற்கான வேலைத்திட்டங்களையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஊடாக, அமைச்சர் காஞ்சன விஜேசேகர முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றார்.

இவர்களை அதிகாரத்தில் அமர்த்துவதற்காக பாடுபட்ட மகாசங்கத்தினர் இன்று, மின் கட்டண அதிகரிப்பிற்கு எதிர்ப்பு தெரிவிப்பதால் அவர்களின் குரல்களை முடக்குவதற்கும் முயற்சிக்கப்படுகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டில் சிறந்த நிலைமையை ஏற்படுத்தியுள்ளார் எனக் கூறுகின்றனர்.

ராஜபக்ஷக்களின் சகாக்களைப் பாதுகாப்பதற்கு பொதுஜன பெரமுனவினரால் எடுக்கப்படும் நடவடிக்கைகளை சுதந்திரமாக முன்னெடுப்பதற்குரிய சுதந்திரத்தை வழங்கியுள்ளமையைத் தவிர அவர் வேறு எதனையும் செய்யவில்லை.

விலை கட்டுப்பாட்டு வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்டு பின்னர் அவற்றை இரத்து செய்வதை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழக்கமாகக் கொண்டிருந்தார். தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இதனையே செய்து கொண்டிருக்கின்றார். ராஜபக்ஷக்களை பாதுகாப்பதை தவிர ஜனாதிபதியிடம் வேறு எந்த வேலைத் திட்டங்களும் இல்லை.

சுனாமி நிதியத்தில் கூட கொள்ளையடித்த மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியமைப்பதற்கு அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்டோர் பெரும் ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளனர். தற்போதும் அநுரகுமார, ரணில் , மஹிந்த என அனைத்து தரப்பினரும் ஒன்றாகவே செயற்படுகின்றனர். மக்கள் இது தொடர்பில் புரிந்து கொள்ள வேண்டும். – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.12.2022இல் வெளியிடப்பெற்றது.